துவம்பதநிஷ்டை.—சாக்கிர சொப்பன சுழுத்தி துரிய துரி யாதீதமென்னும் அவஸ்தாபஞ்சகரூபமாய்ச் சாதிக்கப்படுவது. அவற்றுள். — மதீவிருத்தியானது பகிர்முகநாட்டமாய் வெளி யிட்டு அளவற்ற பரிச்சேதரூபமாய்ப் பரவிநிற்பது: சாக்கிரம்.— அளவற்ற பரிச்சேதரூபமான ஜகசீவபரமுழுதையும் ஒருவனு டைய அகமுகவிருத்தியில் தெரிசிக்கப்படுவது: சொப்பனம். — சாக்கிரசொப்பனபீஜமாய் அறிவறியாமையா யனுபவப்படுவது: சுழுத்தி.—அஞ்ஞானகாரியமான சாக்கிரசொப்பனபீஜம் நசித்து அறிவறியாமைக்கிச் சாக்ஷியாய்நின்று அகிலலோக ஜகசீவபர முழுதும் உதித்தொடுங்குதற்கு மூலமான அகண்டாத்மதேவை விருத்திசாதனையினல் நமதுளத்தி லனுபவரூபமாயுணரப்படு வது: துரியம்.—பிண்டாத்மா அண்டாத்மா அகண்டாத்மா பர மாத்மாவென்கின்ற பேதசதுஷ்டயம்வர்ச்சித்து பரிபூரணவியாபி யாய் எல்லையற்றிருப்பது: துரியாதீதம்.

தற்பதநிஷ்டை.—அவ்வாங்மதீனகோசரமாகவிருக்கின்ற அதீ தப்பிர்மத்தை விராட்டு இரண்யகற்பம் அவ்வியாகிருதம் சர்வேஸ் வரம் பரப்பிர்மமென்னும் சொரூபபஞ்சகநிஷ்டையினல் அனு பவிக்கப்படுவது: அவற்றுள். விராட்டு. — விஸ்வசீவனை வைசு வானரனென்னும் ஈஸ்வரனுக்கனன்னியமாய்க்கண்டு ஆட்டுவா னும் ஆடுவானுமேபோலப்பிரிவற்று அவ்வதீதப்பிர்மத்தை நிஷ்டா ரூபமாயனுபவிப்பது. இரண்யகற்பம்.—தைசசசீவனை சூத்திராத் மாவென்னும்ஈஸ்வரனுக்கனன்னியமாய்க்கண்டு பிரபையும் பிரபா வானும்போலப்பிரிவற்று அவ்வதீதப்பிர்மத்தை நிஷ்டாரூபமா யனுபவிப்பது. அவ்வியாகிருதம். — பிராக்ஞசீவனை அந்தரியாமி யென்னும் ஈஸ்வரனுக்கனன்னியமாய்க்கண்டு பிரக்ஞையும் பிரக் ஞாவானும்போலப்பிரிவற்று அவ்வதீதப்பிர்மத்தை நிஷ்டாரூபமா யனுபவிப்பது. சருவேஸ்வரம். — வைசுவாநரன் சூத்திராத்மா அந்தரியாமியென்கின்ற பேதத்திரயம் வர்ச்சித்து அகிலமங்கள குணசொரூபனுய் அகிலலோக சராசரங்களால் பூசிக்கப்படுவது.

பரப்பிர்மம்.—சீவசாக்கிரம் பரசாக்கிரம் குருசாக்கிரம் சீவ சொப்பனம் பரசொப்பனம் குருசொப்பனம் சீவசுழுத்தி பர

சுழுத்தி குருசுழுத்தி சீவதுரியம் பரதுரியம் குருதுரியமென்ன ஆத்மவர்க்கங்கள் தத்தம்விருத்திபேதத்தால் நவநவமாயபவித் தற்குக்காரணபூதையாகவிருந்தும் அவையாவுக்குமெட்டாதநம் அனுபூதிவஸ்துவாய் எல்லையற்றிருப்பது.

அகமமதுருவாய்வெளியிட்டு நாசம்உற்பத்தி ஸ்திதி ஐந்து கன சுழுத்தியென்னும் அறுவகையவஸ்தையிற்கட்டுண்டுபிரபஞ்ச சாலங்களை விருத்திபண்ணுவது: சீவசாக்கிரம். — அருளுருவாக வெளியிட்டு அகம் ரக்ஷிக்கங்கண சுத்தமாய் நிற்கிரகபாலனங்களைச் செய்யப்படுவது: பரசாக்கிரம். — லீலாகாரணமாகவெளியிட்டு அறிவுருவாய் அனுபூதிவஸ்துவாய் விளங்குவது: குருசாக்கிரம்.— விஷயபோகக்கட்குடித்து மதிமயங்கி மருளுருவாகக் கழிந்தநாள் செய்வது: சீவசொப்பனம்.—சராசரப்பகுதியையுள்ளடக்கி ரக்ஷிக்க காரணமாக மறைத்தியம்பண்ணுவது: பரசொப்பனம்.—பூதபௌஷீக சுபாவ பிரத்தியக்ஷமென்னுந் தெரிசனசதுர்விதம்: குருசொப்பனம்.—அதிகாலச்செய்கையை சுத்தனகாலத்தி லறுபவித்து விழிப்பது: பூதகாலதெரிசனம்.—சொப்பனபலத்தைத் தணிதப்பிரகாரம் பிந்தினகாலத் தறுபவிப்பது: பௌஷீகதெரிசனம்.—மறந்துபோன அதிகஜன்மங்களை ஞானதிருஷ்டியினால் பார்க்கப்படுவது: சுபாவதெரிசனம்-சொப்பனத்திற்கண்டபடி சாக்கிரத்திற்றரிசிக்கப்படுவது: பிரத்தியக்ஷதெரிசனம்.-அனைத்து ஜன்மபீஜமாக ஒடுங்கிநிற்பது: சிவசுழுத்தி.—அவ்வியாபகசொரூப மாய்க் கற்பாதியிலுற்பவித்து பிரளயாந்தத்தொடுங்கிநிற்பது: பர சுழுத்தி.—சங்கற்பசாலங்களைத்தவிர்த்து அகண்டாகாரசமாக ரசித் திருப்பது: குருசுழுத்தி.—சஞ்சிதகோரகர்மங்களை சுத்தஞானாக்கினியாற் ஞானவிளங்குவது: சீவதுரியம்.-பிரளயகற்பதெரிசியாய்ப்பிரபோத நிஷ்டராகவிளங்குவது: பரதுரியம்.-பதார்த்தப்பிரிவுகளற்று ஐக்ய சாந்தசின்மயராக விளங்குவது: குருதுரியம்.

அசிபதநிஷ்டை. — அற்புதசாக்கிரம் அற்புதசொப்பனம் அற்புதசுழுத்தி அற்புததுரியம் அற்புததுரியாதீதமென்னைந்து பேதமாக வகைகட்டிக்கொண்டு நிருவாணநிஷ்டர்களால் விசாரிக்கப்படுவது. அவற்றுள்.—புசுண்ட தேவபூசாகரணத்தை யுபாதித்து குருபதேசத்தாலுணரப்படுவது: அற்புதசாக்கிரம். — ஸ்ரீபதி

கதையை யுவமித்துக் குருபதேசத்தா லுணரப்படுவது: அற்புத சொப்பனம். — சிலேக்கதையையுவமித்துக் குருபதேசத்தா லுணரப்படுவது: அற்புதசூழ்த்தி.—சதருத்திரன்கதையையுவமித்துக் குருபதேசத்தா லுணரப்படுவது: அற்புததுரியம்.—அருச்சுனன் கதையையுவமித்துக் குருபதேசத்தா லுணரப்படுவது: அற்புத துரியாதீதம்.

நிருவாணப்பிரகரணம்.

பரப்பிரம்ம பரமேஸ்வரனை ஸ்ரீராமன் காலாதிதவஸ்துவாயிருக்கின்ற தனது நிசசொரூபத்தை வைராக்கியப் பிரகரணரூபமாய் சூசிப்பித்து சிருஷ்டி திதி சம்மார அவதார அனுக்கிரகாதி தமது அற்புதலீலாமகிமையை வசிஷ்டாதிமுனீந்திரர்களுக்கு ஞாபகப் படுத்தி ஆசாரிய சிஷ்யக்கிரமத்தை மாறுடிக்கொண்டு அவர்களோடு கல்ப கல்பங்களாகவிளையாடும் அற்புதத்தைத் தெரிசன சூசித ஆந்தர்ப் பாகிய அவதார சாரூப்பிய சொரூப பவித்திர காசிய பரித்தியாக அகங்கார விரத ஆராத்திய அபாவமென்னும் லீலாசதுர்த்தச ரூபமாகத்தொகுத்து புசண்ட தேவ வில்வபல சிலார்ச்சன சதருத்திர வேதாள பதிரத சிதித்துவச கச மித்தை யாடபுருஷ டிருங்கி இகஷ்வாகு நவ்விக்கிராதனென்னுஞ் சதுர்த்த சடாக்ஞானத்தால் நிதரிசனமாக்கி மௌனபஞ்சகரூபமாக நிரூபிக்கப்படுவது.

நித்தியதிரிகாலங்களையும் கல்பப்பிரளயங்களையும் அதில்நடக்கும் அற்புதமகிமைகளையும் தெரிசிக்கப்படுவது: தெரிசனலீலை.—பரப்பிரம்மத்தை சகளரூபமாயும் நிஷ்கலரூபமாயும் அபேதசூஷ்மப்பிரகாரஞ் சாக்ஷாத்காரமாக்கி பிரமவிஷ்ணுருத்திரரென்னும் அண்டசராசரமுழுமையும் அகமுகத்திலடக்கிக்காட்டுவது: ஆத்மலீலை. — அவ்வண்டசராசரங்கள்முழுமையும் பஹிர்முகத்தில் விரித்துக்காட்டுவது: பாகியலீலை. — ஆசாரிய சிஷ்யரிருவரும் எக்காலமும்பிரிவற்றிருந்து திரிலோகவனையை நிலை நிறுத்தித் சருவரக்ஷகளையும் பண்ணப்படுவது: அவதாரலீலை.—சருவேஸ்வரன் ஓரதிகாரிபூர்வமாய்ச் சாக்ஷாத்காரமாகி பக்குவ பக்குவங்களைப்பாராது நிர்ஹேதுவாக அவனதம்சபூதர்களை யொருப்படுத்தி தானவர்களுக்குப் பற்றுக்கோடாகநின்று தனதுலோகத்

தைக்கொடுத்து தனதுசமீபத்தைக்கொடுத்து தனதுசொரூபத் தைக்கொடுத்து தன்லீலைடைக்கம்பண்ணிக்கொள்வது: சாரூப் பியலீலை.—சிதாகாசசொரூபத்திலாரோபிதமாகவிருக்கின்ற ஜக சீவபரகல்ப்பிதத்தை ஆசிரயிப்பவர்க்கு சிற்சுடராகநின்று விளக் கிக்கொடுப்பது: சொரூபலீலை.—ஆசிரயிப்பவர்க்குக் கெங்காஜல மாகநின்று பாவச்சேற்றைச்சுத்திகரிப்பது: பவித்திரலீலை.—பணி யாளாகநின்று ஆசிரயிப்பவனைக் கிருதார்த்தனைக்குவது: தாரிய லீலை.—அகமூர்த்தியா யகங்கரத்தைத் தியச்சித்திருப்பது: பரித் தியாகலீலை.—அபினிவேஷத்தா லகமமதுருவாய் விநோதிக்கப் படுவது: அகங்கரலீலை.—மாகர்த்தன் மாபோகி மாத்தியாதியென் கின்ற மூன்றுலகூஷணங்களோடு பிரகாசிக்கப்படுவது: விரதலீலை.- மூத்தாத்மாவாகவிருந்து சர்வராலும் பூசிக்கப்படுவது: ஆராத்திய லீலை.—பரப்பிர்மம் சர்வவியாபியாயிருந்தாலும் கிரியாதர்மத்தை நித்தியபூமியிலும் நித்தியதர்மத்தைக் கிரியாபூமியிலும் ஒன்றோ டொன்றுகலக்காமல் அன்னியொன்னியவபாவத்தால் நடவினை யைவைத்துக்கொண்டு அதற்கதுவாகவிருந்து நித்திய முத்தர்க ளால் விளையாடப்படுவது: அபாவலீலை.

புசுண்டன்கதை.—தீர்க்காயுஷையுடையஞ் பிரளயகல்ப் பங்களையும் வசிஷ்ட வால்மீக நாரத பாரத்துவாசாதி நிருவாண நிஷடர்களினது திருவிளையாட்ட மகிமையையும் பஞ்சதிருத்திய தசாவதார புவனபேத விசித்திரத்தையும் இன்னம்பலவாறான அற்புதங்களையுந் தெரிசிக்கின்ற புசுண்டயோகிசரிதத்தை தெரி சனலீலைக்கி நிதரிசனமாகச்சொல்லப்படுவது.

தேவபூசைகதை.—வசிஷ்டருக்கு உமாமகேஸ்வரர் சாந்தி யமாகி ஆதிமத்தியாந்தரகித சுயம்பு சாஸ்வத பரிபூரணபரமா த்ம தேவை சந்தோஷ சுக்ஞான சமபாவனைமலர்களால் அதற்குரிய பூசாதிரவியங்களோடு அர்ச்சிக்கவேண்டுமென்றுணர்த்திய தேவ பூசாசரிதத்தைப் பூசிதலீலைக்கி நிதரிசனமாகச்சொல்லப்படுவது.

வில்வபலகதை.—அண்டசராசரமுழுதுந்தோற்றியொடுங்கு தற்கு மூலமா யவ்வண்டங்களனைத்தையு முள்ளடக்கி நிற்கும் அவாச்சியசொரூபத்தையுவமித்து சொல்லிய வில்வபலசரிதத்தை ஆந்தரலீலைக்கி நிதரிசனமாகச்சொல்லப்படுவது.

சிலேக்கதை.—பிர்மத்திற்ரூற்றிய பிரபஞ்சம் சிலையிற்ரூற்றிய சித்திரம்போலவென் றுவமித்துக்காட்டிய சிலாசரிதத்தை பாகியலீலேக்கி நிதரிசனமாகச்சொல்லப்படுவது.

அர்ச்சுனன்கதை.—சர்வேஸ்வரன் லோகரக்ஷகார்த்தம் கிருஷ்ணர்ச்சுனளாக வவதரித்து சங்கவிசர்ச்சன சந்நியாச ஈஸ்வராரர்ப்பண பிர்மார்ப்பண யோக க்ஞானமென்னுஞ் சடுலக்ஷணங்களால்எகமேவசுபாவசொரூபத்தை தெளிந்து சருவரக்ஷக தருமஸ்தாபனம் பண்ணுநிற்கும் பௌஷீகசரிதத்தை அவதாரலீலேக்கி நிதரிசனமாகச் சொல்லப்படுவது.

நிர்ச்சங்கணய் கற்பணதீத பரமாத்மாவைத் தெளிந்துநிற்பது:சங்கவிசர்ச்சனம்.—வர்ணச்சிரம கோத்திரசூத்திரவிதிப்படி சற்கருமத்தைச்செய்து அதனல்வரும் பலப்பிரயோஜனத்தைத் தியச்சித்திருப்பது:சந்நியாசம்.—சத்திவிசேஷங்களால் மாறுபடினும் சருவயிதயப்பிரதேசத்தில்வசிக்குஞ்சத்தினுருவனேயெனத்துணிந்து தொய்தவிருத்தியைக் கெடிக்கப்படுவது: ஈஸ்வராரர்ப்பணம்.—சீவேஸ்வரஜகத்தாய்விளங்கிய உலகமுஞ் சித்துருவாகவிளங்கிய ஆத்மாவும் பிர்மசொரூபமென்தெளிந்து திரிபுடியற்றிருப்பது: பிர்மார்ப்பணம்.—பரத்துவசாமானியத்தைத்தெளிந்து அப்பியாசபூர்வகமாய்ச் சாதிக்கப்படுவது: யோகம்.—அப்பியாசதீக்கத்தால்தெளிந்தபடியே நிலைபெற்றிருப்பது:ஞானம்.

சதருத்திரன்கதை.—சமாதியுக்தணகவிருந்த ஓர்சந்நியாசி சகஜானுபவத்துக்கு வெளியிட்டுத் தனதுசங்கல்ப்பத்தால்ச் சீவடன்மூதல் ருத்திரபரியந்தமான நூறுஜன்மத்தை யெடுத்து அந்தருத்திரரூபத்தில்நின்று சந்நியாசிபரியந்தமான தனதம்சபூதர்கள் நூறுபேர்களையும் ஒருமுகமாகச்சேர்த்து அந்த நூறுபேர்களுக்குந் தமது ருத்திரசக்தியைக்கொடுத்து சரீரமுள்ளபரியந்தம் சீவன்மூத்திப்பதத்திலிருத்தி சரீராந்தத்திலவர்களினவருஞ்சதருத்திரமூர்த்திகளாகவிதேகபதத்தைப்பெற்றுர்களென்கின்ற சதருத்திரசரிதத்தை சாரூப்பியலீலேக்கி நிதரிசனமாகச் சொல்லப்படுவது.

வேதாளகதை.—சூரிய வனிலப் பிரகாச கதலி யணுத்துவவில்வபலாதிகளையுவமித்து பரமாத்ம சொரூபத்தை ஓரசனை

மூன்னிட்டு விரவிய வேதாளசரிதத்தைத் சொரூபலக்ஷணமாகச்சொல்லப்படுவது.— அவையாவன — சிற்சிரணாற்காற் பிரமாண்டங்களென்னும் பரிச்சேதவிருளைச்சிரைதக்கின்ற ஞானசூரியனையும் சொரூபசுபாவத்தாற் காலசத்தை விசேயாமசத்தை மூதலிய நித்தியசத்தைதகளை அணுத்துகளாகச்செய்யும் பரமாணிலமாயும் ஜகத்தென்கின்ற தீர்க்கசொப்பனத்திற் சங்கற்பமாகிய சொப்பனம் நாசுவிதமாகத்தோற்றியும் அவற்றில்மறைபோது சாந்தப்பரிச்சியினல் பிரிவற்றிருக்கின்ற பிரகாசசொரூபமாயும் வேறு வேறுகப்பிரித்தவிடத்தும் அவையாவற்காலுக விளங்குவதற் கதனிருடமாயும் பிரமாண்டங்களெல்லாந் தோற்றியொடுங்குவதற்குமூலமாயவ்வண்டங்களிணத்துந் தமதுசொரூபவியாபகத்தில் அணுத்துகளாயிருந்தும் அறிதற்கரியதாய்ப் பிரமாணுகமாயிருப்பதால் அணுரூபமென்றும் சர்வாவயவங்களுக்கும் அவையவியாயிருந்தும் ஞானவிகாசத்தால் பரிச்சேதரகிதமாயிருப்பதால் விஸ்வபலஞ் சிலாபங்கயமென்றும் நிரூபிக்கப்படுவது.

பகீரதன்கதை.—நிரதுலகுருவைச்சேர்ந்து சித்தேகாடசமஸ்தத் தம்ராச்சியாதிபத்தியத்தைத் தியச்சித்து சாந்தி சம்தோகதை சமபாவனசம்பூர்த்தியால் ராச்சியபட்டாபிஷேகசம்பிரமங்களுடன் ஸ்வராலயத்தில் ரதத்தால் ஆகாசகங்கையை ஆகரிஷித்து பகீரணிரதத்தடைந்து வம்சத்தாரை சுதீரணத்தாரணம்பண்ணி அவ்வாகாசகங்கையை சர்வசன பாவபரிகாரார்த்தம் பூலோகத்தில் நிலைநிறுத்தி நிரபுவனசீர்த்திபராட்டிரனென்கின்ற பகீரதசரிதத்தைப் பரிந்திரலீலக்கி நிதரிசனமாகச்சொல்லப்படுவது.

சிகித்துவசன்கதை.-சுவர்னதேசசுதேவதாம்பரபுரத்துமாலை முப்புரிநூலாதியே தேசிகச்சின்னமென்றும் பூசிக்குத்தம்பதைகள் புத்தியீனர்களாயிருந்தால் எவ்விதவுபாயத்தினும் அவர்களின்னத் திருத்தி உஜ்ஜீவிக்கப்பண்ணலாமென்றும் பூர்வஜருக்குபதியே பரப்பிரமமென்றும் சித்தத்தியாகமேசகலத்தியாகமென்றும் சர்வமும் பிரமமயமென்றும் இத்தியாதிலக்ஷணங்களினிலைநிறுத்திய சூடாலையென்னுந் தனதுபாரிகையான தேவிதேவிகாமணிபால்ப் பேறுபெற்ற சிகித்துவசன்சரிதத்தை தாகியலீலக்கி நிதரிசனமாகச்சொல்லப்படுவது.

கசன்கதை.—விவிததிருஷ்டியிற்றோற்றிக் கொண்டிருக்கும் அகங்காரம் சசவிஷாணம்போலப் பிம்மதிருஷ்டியி லெக்காலமு மில்லையெனத்தெளிந்து சித்தத்தியாகபரணய் விஸ்ராந்தியடைந் திருக்கின்ற கசமுனிசரிதத்தைப் பரித்தியாகலீலக்கி நிதரிசன மாகச் சொல்லப்படுவது.

மித்தையாபுருஷன்கதை.—அபிமானபேதத்தாற் ஜனன பரம்பரையெவிருத்திபண்ணி அதனல்வரும் லாபாலாபத்தைச் சுமக்கின்ற அகங்காரத்தைப் புருஷனுகவர்னித்துக்கூரிய மித் தையாபுருடசரிதத்தை அகங்காரலீலக்கி நிதரிசனமாகச் சொல் லப்படுவது.

பிருங்கீஸ்வரன்கதை.— கைலாசஸ்வரனது அனுக்கிரகத் தால் துண்டுதுண்டாகக்கூறுபடுத்திய அகங்கரத்தைச்சிதைத்து மாகர்த்தன் மாபோகி மாத்தியாகியென்கின்ற விரதத்திரயசம் பன்னனுய்ப் பரிச்சேதரகிதனுகத் தடையற்றுவிளங்கிய பிருங் கீசசரிதத்தை விரதலீலக்கி நிதரிசனமாகச் சொல்லப்படுவது.

இகூடவாகுகதை -பிம்மதிருஷ்டியிறை லகங்காராதிகள் வர்ச் சித்து வயகுணப்பிரத்தேக மைமத்திரியாதி குணவிசிஷ்டனுய் விளங்குகின்ற முத்தாத்மாவே சருவராலும் ஆராதிக்கற்குரிய னென பகவன் மனுவிறலனுக்கிரகிக்கும் இகூடவாகுசரிதத்தை ஆராத்தியலீலக்கி நிதரிசனமாகச்சொல்லப்படுவது.

நவ்விக்கிராதன்கதை.—விமலதிருஷ்டியில் விவிததிருஷ்டியும் விவிததிருஷ்டியில் விமலதிருஷ்டியும் இல்லையெனத்தெளிவிக்கும் முனிவரது மாறுவேட சம்வாதசரிதத்தை அபாவலீலக்கி நித ரிசனமாகச் சொல்லப்படுவது.

மௌனபஞ்சகம்.

வாக்குமௌனம் மனோமௌனம் காஷ்டமௌனம் சுழுத்தி மௌனம் மகாமௌன மென்னறந்துபேதமாய் ஞானபூமியின் முடிவாய்விளங்கிய துரிய துரியாதீதவஸ்தையை நிரூபிக்கப்படு வது. அவற்றுள்.-வாக்குமௌனம்.—தர்ம அர்த்த காம மோகூ பிரதிபந்தகமாகிய அதர்ம வர்த்த துக்க பவபந்த அரிஷ்ட சம்பந்தமான அப்பிரயோஜன வாசகங்களுக்குத் தடைசெய்வது.

மதேஜமௌனம்.— பஞ்சேசந்திரியபத்துவாரா விவிதவிஷயங்களிற் ரூவியோடுகிற பகிர்முக விருத்தியைத்தடுத்து அவற்றையகமுக மாக்கி அதிஷ்டானப் பிர்மத்திற் சதாநாட்டம் வைத்திருப்பது. காஷ்டமௌனம்.— அசத்தியம் அநர்தவாதம் தோஷதிருக்கு மாயோபாயகம் நிர்த்தயை நிஷ்காரணவைரம் பாபசரிதம் பிர ஜாக்ஷயம் துரிதாலயம் சுரதாபேக்ஷை தவிர்ச்சென்னியம் துரா சாரம் துராச்சிதம் நரகசாதனமென்னும் அகங்காரபந்திகளாகிய சிவச்சேஷ்டைகளை நிவர்த்தித்து அதிஷ்டானமாத்திரமாக நிலை பெற்றிருப்பது.

சுழுத்திமௌனம்.-நியாசநிஷ்டை அப்பியாசநிஷ்டை சின்மய நிஷ்டை உபசாந்தநிஷ்டை நிருவாணநிஷ்டையென்னும் நிஷ்டா பஞ்சகரூபமாக விதிக்கப்படுவது. அவற்றுள். நியாசநிஷ்டை.— சர்வபரங்களையும் சர்வேஸ்வரன்பக்கலிலேபுகவிட்டு நிர்ப்பாரத்து வஞ்க அனுசந்திப்பது. அப்பியாசநிஷ்டை.- சுதந்தரவிருத்தியை லேசாலேசமாக்கி கற்பூரம்போல உலர்த்தி அருட்நிரூபியப் படித்துவது. சின்மயநிஷ்டை.— நான்நீகணப்போலத் ரூனியா கிருதியாக லயப்படித்தாமல் மூடகோரசாந்தசுத்தசுபாவமென் னும் பஞ்சவிருத்தியைச்சோதித்துப் பரப்பிர்மசாக்ஷாத்காரம் பண்ணுவது. அவற்றுள். மூடவிருத்தி.—மடமையாய்ச் சற்றே னும் பிரக்ஞையற்றுச் சுழுத்தினைப்போலச்சடத்துவமிருதியாய்ப் பீஜரூபமாகவடங்கியிருந்து ஓர்காலத்திற் பிரக்ஞையானது சற்றே அங்குரமாகிற் பார்ப்பதற்குப்பயங்கரமாம்படிக் கோரரூபமாய்த் தடிப்பாரற்றுதயமாவது. கோரவிருத்தி.—சலனரூபமாய் மிருதி யானபாரத்தைச்சுமந்துகொண்டு சூலாலசக்கரம்போலச் சற்றே னும் ஓய்வில்லாது சுழ்ச்சரித்துப் பிரயாசமிருதியால் வருத்தமுறும் விவிதவிஷயங்களிற்ரூவியோடி- விஷயாக்ஞினியால் தஹிக்கப்பட்டுத் தக்கத்துக்காற்ரூமல் ஓய்ந்தவிடத்துச் சற்றேசாந்தமுறுதிப்படுது. சாந்தவிருத்தி.- சீதோஷ்ணசமமாய் ஏற்றத்தாழ்வுகளை விசாரிக் காமல் அதைப்பற்றியெழும்பும் விருத்தியை நசிப்பித்துத் தங் கோபசமனமாத்திரத்திற் சேதனர்நின்றநிலைக்கு இன்பத்தைக் கொடுப்பது. சுத்தவிருத்தி.—நஞ்சினைநஞ்சால் இரும்பினையிரும் பால் அம்பினையம்பாற்கெடுப்பதுபோல ஆசாரதரஹர்தாதிரூனைந்

களைப் போக்குதற்கெதுமறையாய்ச் சத்தாதிகுணங்களாகப் பிரிந் தெழுந்து அனுர்தாதிகளைநிவர்த்திபண்ணி ரக்ஷித்தும் சற்றேறனும் பிரிவில்லாத சகலகுணசம்பூரணமாகவொருமித்திருப்பது. சுபாவ விருத்தி.—சூனியவாதிகளுக்குச் சூனியமாய் பிர்மவாதிகளுக்குப் பிர்மமாய் விக்ஞானவாதிகளுக்கு விக்ஞானமாய் சாங்கியர்க்குப் புருடனை யோகியருக்கீஸ்வரனைப்ச் சைவருக்குச்சிவமாய்க் கால வாதியளுக்குக்காலடமாய் மத்தியர்க்குமத்தியமாய் சமதிருஷ்டியை யுடையர்க்குச் சகலமுமாகநின்றுந் சற்றேறனும் மனமானது விகற்பித்தெழாமல் ஏகாகாரமாக க்ஷமித்திருப்பது.

உபசாந்தநிஷ்டை.—சுத்தவசுத்தங்களுக்குமூலமான சித்த சங்கல்ப்பம் வர்ச்சிக்குமிடத்து சர்வமும்பிர்மமயமென்னும்அழுத் தத்தாற் சர்வதுக்கமும் நிவர்த்தித்து அற்புதசுவாநுபவங்கள் தினேதினேயபிவிர்த்தியாகவிளங்குவது.

நிருவாணநிஷ்டை.-திதிலயோற்பவ பந்தமோக்ஷ தொந்துவ பேதமுழுதும் வர்ச்சித்து பிர்மசாக்ஷாத்காரமகிமையால் மாயை யைச்சுவாதீனமாக்கிக்கொண்டு ஆசிரதரபேக்ஷிதப்பிரகாரம் விளை யாடப்படுவது.

மகாமௌனம்.

அயன் மால் சங்கரன் அருக்கன் இந்திரன் சதாசிவன்முதலிய நித்தியசூரிகள் சேர்த்திப்பிரிவோடும்விளங்கிய அற்புதசுவாநுபவ மகிமையை வசிஷ்டனிராமனுக்குபதேசித்தபடி வால்மீகர் பரத் துவாசனுக்கனுக்கிரகம்பண்ணி வசிஷ்டோபதேசமான அமல ராமாயணத்தைச் சம்பூர்த்திபண்ணுவது.

கைவல்ய நவநீதம்.

பாசுரம். திருமகள்கொழுணன் றேசிகபெருமான், திரு வளங்கனிந்து நான்முகனுக், கருள்செயவசிஷ்டன் சத்திநற்பராச, னவன்வியாசன் சுகர்க்கருளிப், பரவியமுன்னூல்ப்பண்டிதர்க்கல் லால்ப், பாலருக்கடாததென்றண்ணிக் கருணையாலெவர்க்குங் காரணகுரு நம், கமலநாரணன்றனையிறைஞ்சி. (க)

அன்றுளோர்சித்தி அறமொடுதிரமும், ஆயுளும் அருங்கவ
வலியும், இன்றுளோரிழிவும் பெண்ணிலேவெறண்ணை, தேசுகளாட
கன்றினைநோக்கிக், கன்றுபோல்க்கதரி அயர்ந்துதாண்டவன்றன்,
கனவினில் கருமுகில்நீலக், குன்றுபோலெழுந்து குறையலா
மகற்றிக் கோயிலாயவனுளத்திருந்தே. (2)

ஆரணப்பொருளை அருந்தமிழ்க்கவியால், அன்றுளோர்சித்தி
நீற்றேறதுங், காரணங்குறையா துரைத்தகைவல்யக் கருத்திரைத்
தொகுத்தெனதுள்ளம், பூரணமாக்கத் தென்திருக்கோவிடம்,
புவனிமேலருள்சுரந்தெழுந்த, நாரணன்கமலை நாதன்வையல்ய,
ஞானதேசிகனருளாலே. (3)

அருமறைப்பொருளாயமைந்த வைகல்ய, மன்றிமற்றெறன்
றையும்நாடேன், கருணைநாரணனென் றெய்வமேமடல்லால்,
கனவிலும் வேறொன்றைக்கருதேன், இருவினைகவிசேயா
வந்துறினும், இசைந்திடேன் சச்சிதானந்தப், பரமனாணியன்றன்
னடியவர்க்கடியாய்ப், பரவுவேன்பாதபங்கயமே. (4)

இருநூற்றித்தொண்ணூர் மூன்றே, டிணைத்த பாரதத்தி
னுள்ளே, ஒருநூற்றியெட்டால்த் தத்துவம், ஒருப்படினைஞ்சிப்
பின்னே, தருநூற்றியென்பதற் றைந்தால், சங்கதகங்கையினித்
தாண்ட, குருமூர்த்தி தாண்டாளுள்ளத், துறில் நாரணன்றுள்
போற்றி. (5)

அவாங்மனோகோசரமாகவிருக்கின்ற பரப்பிரமதத்துவத்தை
வகாரயகனனக்கோசரித்து ஹரி சிவ விதி இந்திராதி அவதா
மூர்த்திகளாகப்பணிந்து ஸ்ரீபரமசற்குரு ஸ்ரீபரமேசற்குரு பரமாத்
குருவென்றுதித்து தாண்டவப்பிரபுநிமித்தம் நன்னிலத்தின்
கண் ணெழுந்தருளிய ஸ்ரீமங்காராயணசற்குருவினை வாழ்த்தி மன
திஷ்டதெய்வமான கோஷ்டிநாதனனைப்பணிந்து இப்படிக்கோச
ராகோசரமுழுதும் ஒருப்படுத்தி நாரதசுகராதி தம்பதாம்புயத்
களாலனுபவிக்குந் தடையற்றவானந்தமென்னும் முத்திப்பிரதேய
ஜனத்தை நதிநதாசரணம் மண்டுகதாவனம் சராசனதிடம் கங்கி
நோக்கம் பகுதிக்கிராகியமென்னும் வியாக்யானபற்சகருபமாய்
நிருபிக்கப்படுவது.

நதிநதா சரணம்.

நதியாசரணம் நதாசரணமென்னத்துவிபாகமாய். அவற்றுள்: நதியாசரணம்.—பூருவோத்தரமென் றிரண்டுபிரிவாய் அவற்றுள் பூருவம்.—பூீமுக உபதேச ஆரம்ப அவஸ்தை மோக்ஷமென் றைந்துபேதமாயிருப்பது.

பூீமுகம்.

பொன்னிலமாதி ஏழுபாசுரங்களால்க் கைவல்யநவநீதத்தின் இருதயரூபமாகவிருக்கின்ற அதீதப்பிர்மத்தை ஏழுபிரகாரமாகப் பிரித்துவணங்குவது.

முதலாவது.—சருவசீவசாக்ஷியாய்ப் பொன்னிலமாதியெங் நிலங்களினுஞ் சிரேஷ்டமாகிய ஏழுநிலம் அந்தயெழுநிலத்திலுஞ் சிரேஷ்டமாகியதன்னிலம் அந்தநன்னிலமாகியதுரியபூமியை மருவி சருவபூமியும் வியாபித்திருக்கும் ஏகநாயகன்பதங்கள்போற்றி. இரண்டாவது.—திதிலயோற்பவ கிருத்தியகாரணமாய் மாலாய் ஈசனுய் அயனுய்த் தானேயளவற்றமூர்த்தியாயமர்ந்தும் பூரண முத்தனுய்நின்றும் இன்பப்புணரியாதவனுய் சதாஉதயஞ்செய் யும் விமலபாதசொரூபத்தைப்பணிகின்றேன். மூன்றுவது.—யானே யெங்குமாம் பிர்மமென்றும் என்னிடத்தில்க் கவருடைப் புவனமுழுதுங் கல்பிதமென்றும் அறிந்து சுவர்மத்திய ககனம் போல எவருடையகிருபையினல் யானேசொரூபசுபாவமானேன் அவருடையபத்மபாதந் தினந்தோறும்பணிகின்றேன். நான்கா வது.—என்னுடைய மனேபுத்தி இந்திரிய சரீரங்களென்னும் பனியை என்னுடையஞானரவிக்கிமுன்னிலையாக்கிநானும்என்னு டையஅம்சபூதனனியும் ஏகமென்றைக்கியமாக்க என்னுடைய குருவாகத்தோன்றிய ஈஸ்வரனவணங்கினேன். ஐந்தாவது.—அந்தமும் நடுவுமில்லாததாய் அநாதியாய் ஆகாயத்தைப்போல சதாபிரகாசிக்கும் ஞானசற்குருபாதம்போற்றி இதுபந்தம் இது மோக்ஷமென்பதைத்தெரியப் பரந்தநூலைப்பார்க்கமாட்டாமைந் தருங்கூட உணரும்படி வஸ்துதத்துவத்தைச்சொல்லுவேன். ஆறு வது.—விஸ்தாரமான வேதாந்தக்ஷீராப்தியில்மொண்டு ஆசாரியர் கள் அத்துவித தொய்த விசிஷ்டமென்னுஞ் சாஸ்திரத்திரடகடங் களில் நிரப்பிவைத்திருக்கின்ற பால்முழுநெய்யுங்காய்ச்சிக் கடைந்

தெடுத்துத்திரட்டிக் கைவல்யநவநீதமாகக்கொடுத்தேன் இந்தை யடைந்தவர் பசியில்லாதவர்களாகையால் விஷயமண்ணோத்தின்று அலையார்கள். ஏழாவது. — மூத்தனென்னையடிமைகொண்டகர்த் தாவாகிய வேங்கடேசமுகுந்தனவணங்கிச்சொல்லுங் கைவல்ய நவநீதத்தைத் தத்துவவிளக்கஞ் சந்தேகந்தெளிதலென்னு மாமம் வைத்து இருபடலமாகப்பிரித்து உரைசெய்கின்றேன்.

உபதேசம்.

நித்தியமாதி பதினேழுபாசுரங்களால் ஞானசற்குருவையாசிர யித்த சாதனசதுஷ்டயசம்பன்னனை ஓரதிகாரியின் பக்குவசமஸ் காரத்தைப்பண்ணி பிர்மோபதேச பிர்மாபரோக்ஷ பிர்மசாக்ஷ பிர்மசாக்ஷாத்கார சருவசம்பூரண சருவசம்பூர்த்தியை யடைதற் குக் காரணபூதையாயும் திரித்துவத்திலொன்றுயு மிருக்கின்ற தேகியை அவ்வதிகாரிக்கி அனுபவரூபமாயுணர்த்தப்படுவது.

முதலாவது.-நித்தியமாகியசரீரியையும் அநித்தியமாகியசரீரங் களையும் நிச்சயித்தறிகிற விவேகமும் மத்திய இகபர வருதோபாகப் பிராப்திகளில் விராகமுஞ் சத்தியந்திரநிலையாகவிருக்கவேண்டும் சமம் தமம் உபரதி திதிக்ஷை சமாதானம் சிரத்தையென்னுஞ் சட்தேபதமான சம்பத்தும் மோக்ஷமாத்திரம் அதேபரோக்ஷித்திருக் கின்ற முமுக்ஷுத்துவமும் சாதனசதுஷ்டயமென்று சாத்திரங்கள் சொல்லுவர்.

இரண்டாவது.—சமம் தமம் விடல் சகித்தல் சமாதானஞ் சிரத்தை னன்கின்ற ஆறில் அகக்கரணத்தைச்சிக்ஷித்து வற்றவைற் றங்களை ஒக்கப்படுத்துவது: சமம்.-விவிதவிஷையங்களிற்ருவிடியோடு கிற புறக்கரணங்களைச் சிக்ஷைபண்ணுவது:தமம்.-லௌகியத்திலம ரும்படி மதேஷவிவகாரங்களைத்தியச்சித்திருப்பது: விடல்.-சகுரக் காதிதோராடினும் பிராரத்வபீடிதமென்றனுபவிப்பது: சகித்தல்.

மூன்ருவது.—சிரவணர்த்தத்தை மாத்திரஞ் சித்தத்தைத் சரசமாகச் சிந்திக்கவைப்பது: சமாதானம். சிரோக்ஷடமானசாஸ் திர சற்குருவைக் சிநேகமாகப்பற்றுவது: சிரத்தை சிரோக்ஷட மிருந்த ஆறுபேதமான சமதமாதிச்சாற்கு அர்த்தமிதுவென்று மேலோர்சொல்லுவர்.

நான்காவது. — சாதனமில்லாமல் ஒருகாரியத்தைச் சாதிப்பவர்கள் உலகத்திலில்லை ஆகையாலிந்தச் சதுஷ்டயசாதனம் அடைந்தவர்க்கே பிர்மக்ஞானம் உண்டாகும் சாதனசதுஷ்டயமில்லாமல் ஞாதனவிவேகியுள்ளத்தில் அந்தப்பிர்மக்ஞானம் நழையாது நழையுமாகில் அவன் பூதஜன்மங்களில் அளவற்ற புனிதனகிய புருடனகும்.

ஐந்தாவது. — அதிகாரியான இவன் ஆதியாத்மீக ஆதிதெய்வீக ஆதிபௌதீகமென்கின்ற தாபத்திரயத்தையடைந்து லெய்யில் சகிக்காப்புழுவைப்போல் வெம்பிப் பவத்தைப்போக்கும் ஞானதீர்த்தம் படிதற்பொருட்டுப் பதட்டமுற்றான்.

ஆறுவது. — இப்போ அமைந்த மானவி மக்கள் அர்த்தமென்னும் ஈஷணைத்திரயத்தைவிலக்கி வெயினர்வலையிற்சிக்கி கைக்கி அகப்படாமல் முட்டாக்கிலேறுடுஓடியமானைப்போலப்பஞ்சகோசவலையில்சிக்கி அதற்குவசமாகாமல் அதனையறுத்தற்கசக்தனைகப்போனவன் வெறுங்கையோடுபோகாமல் அவ்வண்ணமாகவே சென்று ஞானசாரியனைக்கண்டு தீக்கமாகவணங்கினன்.

ஏழாவது. - கூப்பியகரங்களையுடையனகின்று அடிதுதிகொண்டு சொல்லுவான் தாருமாறுகச்சேர்ந்து நாடகசாலையைப்போலதத்தங்கருமானுருபமாய்ப்பிரிந்தோடும் மாயவாழ்வென்னுஞ்சாகத்தால் வாடினேன் ஐயனேயென்னுள்ளமானதுகுளிரும்படி மாறுகப்பிணங்கிய சோகபாசப் பின்னலைச்சிதைத்து நேராகயிணங்கியருளவே என்னைரக்ஷிக்கவேண்டும்.

எட்டாவது. — ஐயன் சிஷ்பிரவர்த்த மாதாவைப்போன்று ஆமையைப்போல அகத்திலிக்கருதி மீனைப்போலக் கண்ணினால் நோக்கிபக்ஷங்களாலறவணைக்கும் பறவையைப்போலக்கைகளால் தடவி சமீபத்திலிருந்து உனதுபிறவிமாற்றும் ஓருபாயமிருக்குது சொல்லவென் சொன்னபடிகேட்டையயாகில் தொடர்ந்துவந்தபவம் உன்னைவிட்டுத்தொலைந்துபோகும்.

ஒன்பதாவது. — தொடர்பவந்தொலையுமென்ற வாக்கியங் கேட்டமாத்திரம் விசாலமதியில் மூழ்கினவனைப்போலச் சரீரமுங்குளிர்ந்து உள்ளமும் ஆறி அன்பானது அடர்ந்தொழுகுவது

போல ஆனந்தபாஷ்பத்தைக்காட்டி மடன்மலர்ப்பாதத்தைத் தூனராவர்த்தி வணங்கி எழுந்துநின்று ஈதுசொல்லுகிறான்.

உத்தாவது.-சுவாமி தொண்டன்சொன்னது கேட்கமாட்டாதவை ணுணலும் நின்னுடையகிருபையிலே நீரோயென்னையாளலாம் உன்னதுபிறவியைமாற்றுதற்கு ஓருபாயமிருக்குதென்று சொன்னீர் அந்தஉபாயம் இன்னதெனக்காட்டி ஈடேற்றவேண்டும்.

பதிநேழுவது.—அடங்கியவிருத்தியையுடையன் இவனெனத்தெரிந்து பின்பு நெருங்கியமட்கூட்டுக்குள்ளிருக்கும் பூதவைக் குமுன்சத்திக்கும் குளவியின்கொள்கையொத்து ஆத்மசாரூபத்தைமருவவேண்டித் தொடங்கியகுரு உடம்புக்குள்ளிருக்கின்ற சிவனைத் தன்முகமாகத்திருப்பி அவனைப்பார்த்து உபதேசம் ஓதுகிறார்.

பன்னிரண்டாவது.-என்மகனேவாராய்த் தன்னைமறந்துவன் ஜனனமரண மரணஜனனமுடையனுய்ப் போதமாராயுந்தன்னைத் தானென்றறியுகிற பரியந்தம் நீங்காதசுழல்க்காற்றில் அகப்பட்ட செத்தையைப்போலக் கீழதுமேலது மேலதுகீழதாய்ச் சுழன்று சுழன்று ஓயாது காலச்சக்கரப்பிர்மையில்ச் சுற்றாரிப்பன்.

பதின்மூன்றுவது.—முன்புதன்னைக்கண்டு தலைவனைத்தெரிசிப்பானுகில்ப் பின்பு அந்தத்தலைவன் தானையும் பிர்மமாயுள்ளதும் பிறப்பை நீக்குவன் நீயுன்னையறிவையாகில் உனக்கொருவெகுதியு மில்லை என்னை நீ கேட்டபடியால் நான் உனக்கு இத்தைத யுட தேசித்தேன்.

பதினன்காவது.—ஐயா! என்னை நானறியாதவனை நீசொத் தோ சொன்னீர் நானென்பது படுத்துவமில்லாமல் மமதாரூபமாக விருக்கின்ற ஊர்வன ஜலசர மிருக பக்ஷி தாவரமென்கின்ற பஞ் சப்பிராணிகளைப்போல தன்னைத்தானென்றறியாத மனுஷியாள் தாணியிலும் ஒருவரிருப்பரோ பின்னைத்தானவர்கள்முழுதும் பிறந்தும் இறந்துஞ்சுழல்வதேன் நின்னைத்தானேகம்பிய எனக்கு நிச்சயத்தை யருளுவீர்.

பதினைந்தாவது.—ஊர்வன ஜலசர மிருக பக்ஷி தாவர மனுஷிய தேவமென்றழுதேபதமாகவிருக்கின்ற இதுதேகம் தனித் தனியே இந்தத்தேகதாங்களுக்கதிஷ்டாதாவாய்த் தானுகவும் யாரு

கவுமிருந்து சத்துலகூணத்தாற்காப்பாற்றியும் சரீரம் அவஸ்த்தை அபிமானிகளுக்குப் பிரத்தேதகணுப்பின்று அவற்றில்முழுகாமல் சித்துலகூணத்தால் அதன் இதாகிதங்களைப்படகுத்துணர்ந்தும் மம துருவம்நீங்கிய ஆனந்தலகூணத்தால் அகம்அகமென்று சுவதச் சுகியாயிளைப்பாற்றியும் சச்சிதானந்தமூன்றும் ஒருப்படுமிடத்து சகலகுணசம்பூரண நித்தியசாம்பிராச்சிய சருவாதிபத்தியத்தை யடைந்தும் அவாச்சியருபனைகவிருக்கின்ற இவன்தேதகியென்றும் விஸ்தாரப்பொருளை யுள்ளடக்கி இன்னதுதேதகந்தேதகி இவனென உணர்வன்யாவன் அன்னவன்தன்னத்தானென்றறிந்தவனுகு மென்று சுஞ்சேபரூபமாய்ச்சொன்ன சற்குருவாக்கியத்தையுபே கூஷித்து பின்னையுந்தேதகியார் இந்தத்தூலமல்லாமலென்றுகேட்ட அறியாவிளுவுக்குப் பீடைகொண்டவர் உடனேஅறிவிளுவென்ப தைக் குறிப்பினுற்றெரிந்து புன்சிறிப்புடையாரானர்.

பதினுறுவது. — தேதகத்தையல்லாமல் யார்தேதகி அவனைக் காணேனென்றுய் தேதகமில்லாவிடத்து மோகமானசொப்பனத் தில்வந்து மூளைத்திடமவன்யார் சோகமானசொப்பனம் நீங்கிய விடத்து சுழுத்தியைப்பார்த்தவன்யார் நீயாகச் சாக்கிரத்தில் சந்திக்கும் அறிவுதான்யாது அதைச்சொல்வாய்.

பதினேழாவது.-சாக்கிரத்தைப்பார்த்ததும் அதிலுள்ளநினைவு நீங்கி சொப்பனத்தைப்பார்த்ததும் சாக்கிரசொப்பனமிரண்டும் நீங்கியவிடத்துச் சுழுத்தியைப்பார்த்ததும் நான் தினமனுபவிப் பதனல் தேதகியொருவனுண்டென்பதொக்கும் தெரியவுமில்லைச் சற்றே மனதினிலுதிக்கும் பின்புமறைக்கும் அதையருளுவீர்.

பிர்மோபதேசம். — அதிகாரி சற்குரு ஐக்கிய சொரூபமென் கின்ற திரித்துவப்பொருளையும் உணர்வொளிநிறைவாய் ஏகமாய்ச் சமமாயிருக்கின்ற திரியேகப்பொருளையும் தத்தம் அதிகாரா னுரூபமா யுணர்த்தப்படுவது. பிர்மோபதேராசுகம். — ஆசாரியரூப தேசிக்க படேராகூஷவாசகத்தை அனுபவரூபமாய்க்காணப்படுவது.

பிர்மசுகஜம். —நிறைவா யொளியாய் உணர்வாய் ஏகமாய்த் துவைய மாய்ச் சமமாய் ரூபமாய் நாமமாய்ச் சாட்டியபாகம்விடவிட நிறை நிறையே தன்மயமாக அனுபவப்படுவது. பிர்மசாகூஷாத்காரம்.— பாஞ்சடூத பௌதிக நாமரூப சம தூலைய ஏக உணர் வொளி நிறை

வாதி சர்வமும் பிர்மரூபமாய்ப் பிரத்தியகூஷமாவது. சருவசம்பூரணம். — அத்துவித தொய்த சுபாவ விசிஷ்ட சைவ வைஷ்ணவ சுவாத்ம சௌராதி சமஸ்தமதங்களும் ஆசரிப்பவர்க்குத் தந்தம் அதிகாராநுரூபமாயுணர்த்தியும் அவையாவுஞ் சற்றேறுவடமாறுபடாது தங்கள்சுவாநுபவத்துக்கொத்திருப்பது. சர்வசம்பூர்த்தி.- ஹரிசிவப்பிர்மாதிகளைப்போல மகாதிருஷ்டியையுடையனாய் உதயாஸ்தமின்றி எக்காலமும் விளையாடப்படுவது.

ஆரம்பம்.

சாதனசதுஷ்டயசம்பன்னனனாதிகாரி தாபத்திரயதுக்கத்துக்காற்றுமல் ஈஷணைத்திரயங்களைத்துறந்து ஞானசற்குருவையாசிரயிக்க அவர்பக்குவசமஸ்கார வாக்கியபோதமகிமையால்த்துக்கோபசமனமாக்கி தேகதேகியைவிவேகித்து தேகத்துக்குள்ளிருக்குந் தேகியைப்பார்த்து நியாயத்துவயரூபமாய்ச் சொல்லத் தொடங்குவது.

சாதனம். — விவேக விராக சம்பத்து முமுக்ஷுத்துவமென்னச்சதுர்விதரூபமாயிருப்பது. அவற்றுள். விவேகம்.-சரீரம் அநித்தியம் சீவன் நித்தியம் சரீரசீவன் அநித்தியம் ஈஸ்வரன் நித்தியம் சீவேஸ்வரஜகமூன்றும் அநித்தியம் அதற்குமூலகாரணமான பரசொரூபம் நித்தியம் நித்தியசாஸ்வதமான அந்தப்பரசொரூபமே குருசொரூபம் இந்தக்குருசொரூபமே அந்தப்பரசொரூபமென நிச்சயித்தறிவது. விராகம். — அநித்தியரூபமான இகபரபோகங்கள் முழுதிலும் அருவிருப்புடையனைப் இச்சையற்றிருப்பது. சம்பத்து. — நித்தியரூபரான பரமசற்குருவை யடைதற்கேதுவான சமதமஉபரதி திதீக்ஷை சிரத்தை சமாதான சாட்குண்ய சம்பூர்த்தியையடைந்திருப்பது. முமுக்ஷுத்துவம். — மமதைகங்கார தொந்துவரூப மிசிரசத்துவாதி அசுத்தகுணங்கள் முழுதும் வர்ச்சித்து சுத்தசத்துவகுணசம்பூரண சுசீலப்பிரபுக்களாலெவிடவிக்கின்ற சீவன்முத்தியினிடத்தும் விங்கசரீரம் அடங்கும்போது அந்தச்சுத்தசத்துவ சுசீலசற்குணங்கள் முழுதும் அடங்கி அற்புதரூபமாகப்பிரகாசிக்கின்ற விதேகமுத்தியினிடத்தும் அத்தியந்தம் விருப்பமுடையனாயிருப்பது.

தாபத்திரயம்.—ஆதிஆத்மீகம் ஆதிதெய்வீகம் ஆதிபௌதீக மென்னத் திரிவிதம்.—பிர்மத்துக்கு அபின்னமான ஆத்மசொரூபத்தைமறந்து மனச்சகூடராதிஅநாத்மவர்க்கங்களை ஆத்மபுத்திபண்ணி அதற்குரிய வியாதியாதிபீடைகளினல் வருகின்ற மூலதுக்கம்: ஆதியாத்மீகம்.—பரதெய்வத்தைமறந்து புவனதெய்வங்களாகப்பேதித்து நரக சுவர்க்க சீதோஷ்ணதிகளால் வெப்பமூற்று அதனல்வருகின்ற மூலதுக்கம்: ஆதிதெய்வீகம்.—தேவோகம் மனுஷியோகம் சித்தோகமென்னச் சுதந்தரித்து அதற்குரிய லாபாலாபங்களைச்சுமந்து அதனல்வருகின்ற மூலதுக்கம்: ஆதிபௌதீகம்.

துறவு.-பூசாசேவைக்கருகமாயும் முமூகூக்களுக்கு அருகமாயுமிருக்கின்ற காஷாயாதிவேடத்தைக் கௌணமாய்க்கொண்டு துறவுக்கு நிராசையே பிரதானகாரணமென்றுணரப்படுவது.

சற்குரு.—பரசொரூபமே குருசிஷ்யனெனப்பிரிந்து தமதம்ச பூதனை சிக்ஞாசுவுக்கு சுக்ஞானியாய்நின்று நியதி பூர்த்தியென்னும் உபயசமஸ்காரத்தாலுணர்த்தப்படுவது. நியதிசமஸ்காரம்.—அகம்பிர்மம் சிவம்பிர்மம் விஷ்ணுபிர்மமென்று சேதனர்நின்ற நிலைக்கியோகசமாதியிலொடுக்கிக்காட்டுவது. பூர்த்திசமஸ்காரம்.-சமத்துவயோகபரிபூரணராயும் அவாங்மனோகோசரமாயுமிருக்கின்ற பரப்பிர்மதத்துவத்தைதனதிடத்தும்உனதிடத்தும் விஷ்ணுவினிடத்தும் பிர்மாவினிடத்தும் சருவப்பிராணிகளிடத்தும் சகஜாநுபவத்தால் இன்புருவாகநிறைவுற்றுக் காண்பது.

பக்குவசமஸ்காரம்.-சிந்தை திருஷ்டி அபயப்பிரதான சமீபத்திருக்கை வாக்கியபோதமென்னும் பஞ்சசமஸ்காரரூபமாய்ஆசிரயமான அதிகாரியின்பக்குவா பக்குவத்தைப்பரீக்ஷிக்கப்படுவது.

துக்கோபசமனம்.—தேகபுளக சித்தசிராந்த ஆனந்தபாஷ்பபுனர்ச்சேசவித அசக்திதத்துவ தயாபாத்திர அபவர்க்கவாஞ்சித சந்நிதிப் பிரார்த்தனையென்னும் அஷ்டப்பிரீதியை அவ்வதிகாரி சற்குருமுன்னிலையில் வெளிப்படக்காட்டுவது.

நியாயத்துவயம்.-முன்னேனகாலத்திலிருக்குமரங்களைக்காட்டி அதன்முடிவில்த் தனித்திருக்கு மூன்றும்பிறையைத்தெரிசிக்கச் செய்பவர்போலும் சுற்றிலுமிருக்கும் உடுக்களைக்காட்டி அதன்

மத்தியப்பிரதேசத்தில் நித்தியசுமங்கலியாய்ச் சதாவெஸ்டோரா டு கூடிக்கொண்டிருக்கும் அருந்ததியைத்தரிசிக்கச்செய்பவர்போ லும் அத்தியாச சத்தியோற்பவரூபமாய் விஸ்வவிராட் துலத்தை முன்னேகாட்டி அதற்குமூலமாய் அதன்முடிவில்த் தனித்திருக் கும்சமத்துவயேகபரிபூரணரான பரப்பிர்மத்தையும்விஸ்வவிராட் ரிருதயகமலமத்தியையில் எக்காலமும் அந்தப்பிர்மத்தை விட்டுப் பிரியாது சதாகூடிக்கொண்டிருக்கும் ஆத்மாவையும் முனிதோஷ் டரான ஆசாரியருணர்த்தத்தொடங்குவது.

அத்தியாசோற்பவம். — உணர்வொளிநிறைவாய் நாமரூப தொய்தமில்லாமல் சமமாயும் ஏகமாயுமிருக்கின்ற அதீதப்பிர்மத் தினிடத்தில் காலத்திரயத்துமில்லாத ஜகதீவபரகல்ப்பிதத்தைப் போதகார்த்தம் ஆரோபயுத்தியினலேற்றிவைத்து அபவாதயுத்தி யினல் நிவர்த்திபண்ணி இவ்விரண்டுக்கும் அதிஷ்டானமாயும் சிரு ஷ்டிக்குமுன்னம் சத்தாமாத்திரமாயுமிருக்கின்ற அந்தஅதீதப்பிர் மத்தை ஆசிரயிப்பவர்க்குப் போதமாக்குவது.

சத்தியோற்பவம்.— அவ்வியக்தசுழுத்தியி லடங்கியிருக்கின்ற சீவர்கள் நிமித்தம் அகிலகாரணசொரூபனன ஈஸ்வரன் திருவுள்ள நோக்கத்தால் மூலசுபாவத்தைவிட்டு முக்குணாங்கள் விடத்த மாகி சத்துவகுணத்தில் ஈஸ்வரனும் ரசோகுணத்தில் சிவர்களும் தமோகுணத்தில் ஆவரணவிசேஷபமும் விசேஷபத்தில் பாஞ்சபூத பௌதிகமும் உண்டானவிதப்படி பௌதிகத்தைப் பாஞ்சபூதத் திலும் பாஞ்சபூதத்தை விசேஷபத்திலும் ஆவரணவிசேஷபத்தை த்தமோகுணப்பிரகிருதியிலும் சீவர்களை ரசோகுணப்பிரகிருதி யிலும் ஈஸ்வரனைச் சத்துவகுணப்பிரகிருதியிலும் முக்குணாங்களை மூலசுபாவத்திலும் கிரமமாகவடுக்கி டரீ சற்குருதன்சோயாரியப் பவனை அகிலமங்களகுணசொரூபனன பரமேஸ்வரனுபத்துப் பாத்திரமாக்குவது.

அவஸ்தை.

அஞ்ஞானம் ஆவரணம் விசேஷபம் பரோக்ஷம் அப ரோக்ஷம் துக்கநிவர்த்தி கடையற்றவானந்தமென் றிழுதேபத மாய் ஆரோகணக்கிரமமாக விசுவாவஸ்தையைக்கடந்து நிற்கும் அதிகாரிக்கு அவரோகணக்கிரமமாயுணர்த்தப்படுவது. அவற்றுள்-

ஆதாரமான அதிஷ்டானப்பிர்மத்தை மறந்தது: அஞ்ஞானம்.— அதிஷ்டானப்பிர்மத்தையுணர்ந்தஞானியீசனை மறைக்காமல் நான் சீவன் நான்பரனென்னும் ஆரோபப்பிராந்தாஞ்டையஞானசட்சு வைக்குருடாக்கிப் பிர்ம ஈச கூடஸ்த சீவாதிபேதந்தெரியாமல் மறைக்கப்படுவது: ஆவரணம்.—ஜகசீவபரமாய் கல்ப்பாதியிலு தித்து மூத்திசேர்வார்க்கனு கூலமாகக் கல்ப்பமுழுதுமிருந்து உண் டானவிதிப்படி நிரமமாகக் கல்ப்பாந்தத்தி லொடுங்கப்படுவது: விகேஷபம்.— ஆசிரயிப்பவர்க்கு ஆரோபஜகசீவபரத்தை நிய தித்துஆதாரமான அதிஷ்டானப்பிர்மமே நீயென்றுணர்த்துவது: பரோகஷம்.-தீர்க்கவிசாரத்தால் அதிஷ்டானதத்துவத்தைத்தெளி வித்து நிச்சசந்தேகனைப்ப பரிணம ஆரம்ப விருத்தி விவர்த்த மென்னும் அத்துவிதசொரூபமே தானயிருப்பது: அபரோகஷம்.

காரியரூபஜகசீவபரமுழுது மித்தையாகக்கண்டு அதைப் பற்றியெழும்பும் விருத்தியை நசிப்பித்து நிரந்தரம் காரணரூத சருவவியாபக ஞானஸ்மரணையினால் அக்ஞானமறதியைக்கெடுக் கப்படுவது: பரிணமபகஷம். — காரியகாரணங்களைவிவேகித்து நன விற் சுழுத்தனைய் சுட்டுதலற்று காரியகாரணமுழுதும் இருந்த படியேயிருக்க காரணரூதசேயகப்பிர்மதிருஷ்டியினால் ஆவரணை நாசத்தைப் பேதிக்கப்படுவது: ஆரம்பபகஷம். — காரணரூத பரமாத்மாவினிடத்துண்டான காரியரூபஜகசீவபரமுழுதும்கார ணரூதபரமாத்மாவைக் காண்னியமாகத்தெரிசிப்பித்து சருவமும் பிர்மமயமென்னும் அழுத்தத்தால்ஆரோபமாய்த்தோற்றிய சித்த சீவாதிவிவிதவிசேஷபத்தை நிவர்த்திக்கப்படுவது:விருத்திபகஷம்.- ஜகசீவபரமென்னும்ஆரோபப்பிராந்திநீங்கிசருவமும்அதிஷ்டான பிர்மமாய்த்தெளிந்த ஞானிக்கு தேசகாலாவஸ்தைகளின்றி சர்வ தேச சருவகால சருவாவஸ்தைகளிலுந்தடையற்று சருவானந்த சம்பூரணமா யனுபவிக்கச்செய்வது: விவர்த்தபகஷம்.

செய்யவுந் தவிரவும் மற்றொன்றுக்கவுமான கருமத்திரயமும் அவிச்சின்ன பிரதிவிம்ப அத்தியாசமென்னும் உபாதித்திரயமும் அகம் ஒருமனுஷன் ஒருகர்த்தா ஒருசீவனென்னும் அகங்காரத் திரயமும் ஆதியாத்மீக ஆதிதெய்வீக ஆதிபௌதீகமென்கின்ற தாபத்திரயமும் இன்னம்பலவாறுப்ப பூருவம்பரிச்சேதவிருத்தி

யிரு லுண்டான சமஸ்தமான வஸ்துக்களும் நிவர்த்திக்கச்செய்வது: துக்கநிவர்த்தி.

விண்ணுலகே தேவாகவிருக்கின்ற மானவசுவம் தகனமாகிறபரியந்தம் மனுஷ்ஷகவிவகரிக்கப்படுவதுபோல் பிரதிவிம்ப சிதாபாசரூபம்நசித்து பிர்மரூபமாய்விளங்கியசீவன் சிதாபாசகாரியமாமரூபதேகமுள்ளபரியந்தம் முன்னம்போல விவகரிக்கப்பட்டு வித்துவரன் வரியான் வரிஷ்டனென்கின்ற சீவன்முத்தரை செய்தல் செய்வித்தல் அறிதல் சுகித்தலென்னும் விவகாரசஸ்திடபிரமை யஞ்ஞ்சத்துவாபத்தி அசம்சத்தி பதார்த்தாபாவனை துரியமென்னும் நான்குபூமியில்வசிப்பவனுய் விதேகப்பிராப்த சரூபசமானத்துவ துரியாதீதப்பிரயோஜனத்தை யடையப்படுவது: தடையற்றவானந்தம்.

விசுவாவஸ்தை.—சாக்கிர சொப்பன சுழுத்தி துரிய துரியாதீதமென்னும் அவஸ்தாபஞ்சகநிஷ்டையினல் சீவப்பிராந்திரூபதும் வர்ச்சிக்கப்படுவது. அவற்றுள். — விருத்தியுருவங்களை நேகமாய்த் தோற்றுவது. சாக்கிரம்.-ஒருவிருத்தியி லநேகரூபமாய்த்தோற்றுவது: சொப்பனம்.—விருத்திதோற்றுது சாக்கிர சொப்பனமிஸ்மாயொடுங்கிநிற்பது: சுழுத்தி. — பிரத்தேக சாக்ஷியாய்நின்று தூலாதிகாலபரியந்தமுணரப்படுவது: துரியம். — சுத்தமாத்திரம்மாய்த் தூலாதியைப்பற்றியெழும்படும் விருத்தி நசித்துச் சயஞ் சோதியாகயெல்லையற்றிருப்பது: துரியாதீதம்.

மோகூடம்.

பிர்மஞானத்தைப்பெற்ற வித்து வரன் வரியான் வரிஷ்டனென்னுஞ் சதுர்வித சீவன்முத்தர்களின் நிஷ்டாதேபதத்தால்த் தார்தம்மியமும் அஷ்டகத்தியாக சொரூபவியாபக மென்னும் விதேகமுத்தியில்ச் சமானத்துவமுமாயிருப்பது. — சுத்துவைசடணுப்நின்று விதிவத்தானதர்மங்களைப் பரோபகாரார்த்தமாய்நடத்துபவன்: வித்து. — சமாதியுக்தனுகநின்று சரீரசஞ்சாரநிமித்தங்தாணுகளுன்னுபவன்வரன். —வேற்றேரா லுணர்பவன்: வரியான். தனதன்னியங்களைமறந்துசதாசுகியாகரமித்திருப்பவன் வரிஷ்டன்

அஷ்டகத்தியாகம்.—ஆசாவிசர்க்கத்தால்: ஆகாமியங்கெடும்.-ஞாணக்கினியிஞல்: சஞ்சிதங்கெடும்.—பிராரத்துவம்: அநுபவிக்

தாற்றீரும்.-புண்ணியபாவம்: பூஷணை தூஷணையிலல் போகும்.-அறிவுதயமாலல்: அவித்தை மாயை நீங்கும்.—துரியவிபுவில்: சூக்குமமிறக்கும்.—காலமுடிவில்: தூலம் போகும். இவையே அஷ்டகத்தியாகம்.

சொரூபவியாபகம்.—சீவன்முத்தர்கள் தேகமென்னும் உபாதி நீங்கியமாத்திரம் அகம்புறமென்பதற்று அடிநடுமுடிவில்லாததாய்க்கடோடாதிநீங்கிய ககனத்தைப்போல போக்குவரவற்று எப்போதும் இருந்தபடியேயிருக்கின்ற விதேகமுத்திப் பதத்தையடைந்திருப்பது.

உத்தரம்.

தத்துவம் சத்துவம் லிங்கம் ரகூஷிகம் சாமியம் தாரதம்மியம் ஆத்மசித்தி நிரசனம் ஆனந்தம் பரிபூரணமென்ன தசபேதமாயிருப்பது. அவற்றுள்: தத்துவம்.—அகோசரசுயம்புவாயிருப்பதை ஞானவான்கள் எகநாயகனெனக்கோசரித்து இதயப்பிரிவற உதயாஸ்தமின்றினைக்காலத்தும்அநுபவிக்கின்றபரப்பிரம்மம். சத்துவம்-தத்துவரூபத்தினின்று லிங்கசூக்குமம் வெளியிடும்போது வெளியிட்டு லிங்கசூக்குமம் அடங்கும்போது தத்துவரூபத்திலடங்கியிருப்பது. லிங்கம்.—கர்த்தபோக்கத்தியாகியாய் கல்ப்பாதியிலுதித்து கல்பமுழுதும்விளையாடி கல்ப்பாந்தத்திலடங்கியிருப்பது.-ரகூஷிகம்.— ஆசிரதர்பவபந்தத்தைப்போக்கி அயிகபூர்த்தியைப்பண்ணி மறுமையில்ப் பற்றுக்கோடாகநின்று மேல்வீடுகொடுப்பது. சாமியம்.—பிர்மக்ஞானத்தில்சமத்துவமுடையராய்தேவன் மனுஷன் சித்தினென்னும் மமதகங்காரம்வர்ச்சித்திருப்பது. தாரதம்மியம்.— தேவ மனுஷிய சித்தினைனப்பிரிந்து பிர்மக்ஞானிகளாயிருந்தும் மாயாசம்பந்தத்தில் ஏற்றத்தாழ்வுடையராய் வாழ்ந்துகொண்டிருப்பது. ஆத்மசித்தி.— காரியரூபமான மாயாப்பிரபஞ்சம் காரணரூபரான பரமாத்மாவினிடத்தில் கட்டோடுமில்லையென்றுறப்படக்காண்பது. நிரசனம்.— சத்திமாணிய பரிபூரணபரமாத்மாவைத் தவிர சத்தியாகிய மாயையை ஒரு தனிமுதலாகவெண்ணும் மயக்கத்தைப் போக்கி சர்வமும்பிர்மமென்றுணரப்படுவது. ஆனந்தம்.— பிர்மக்ஞானம் சத்துவப்போற விரதபலம் ஆசிரகாரகூஷிகம் ஈஸ்வரசாமியம் மாயாதாரதம்மியம் பரமாத்ம

சித்திமாயாதிரசனம் தடையற்றவானந்தமென்ன நவவிதபலப்பிர
சித்தி மாயாதிரசனம் தடையற்றவானந்தமென்ன நவவிதபலப்பிர
தமும் சற்குருமுகமாய்ச்சித்தித்து சற்குருவாகவெழுந்தருளிய பூரீ
தமும் சற்குருமுகமாய்ச்சித்தித்து சற்குருவாகவெழுந்தருளிய பூரீ
பகவான்நாராயணபரப் பிர்மத்தை சதாஸ்மிதளத்தியம்பண்ணிக்
பகவான்நாராயணபரப் பிர்மத்தை சதாஸ்மிதளத்தியம்பண்ணிக்
கொண்டிருப்பது. பரிபூரணம்.—ஒருமைப்பட பூருவம் கீதாபலப்
கொண்டிருப்பது. பரிபூரணம்.—ஒருமைப்பட பூருவம் கீதாபலப்
பிரதரூபமாயடைந்த பரமபாக்கியத்தைத் தனித்தனியேபிரித்து
பிரதரூபமாயடைந்த பரமபாக்கியத்தைத் தனித்தனியேபிரித்து
கைவல்யபலப்பிரதரூபமாய் அனுபவித்து அநுதினநவநவமாக பரி
கைவல்யபலப்பிரதரூபமாய் அனுபவித்து அநுதினநவநவமாக பரி
பூர்த்திப்பண்ணுவது.

நதாசரணம்.

உத்தரபடலத்தின் அந்தத்தில் தொடங்கி அதிகாரி ஆத்மா
மாயை ஈஸ்வரன் பரப்பிர்மம் லக்ஷணை அவஸ்தை ஆரோபம்
ஆதாரமென்றென்பது விஷயமாகத் தொகுத்து நித்திய பூர்த்தர்
களனுபவத்தை தலைகடைபாகநிரூபிப்பது.

அதிகாரி.—சுத்தஞானி சிக்ஞாசுவென்றிருவகை. அவற்றுள்.
சுத்தஞானி.—சத்துவாபத்தி அசம்சத்தி பதார்த்தாபாவனை தூரிய
மென்னும் ஆரூடபூமியில் வசிப்பவனைப் விதத்துரைன் வரியான்
வரிஷ்டனென்னும் நாமசதுஷ்டயசீவன்முத்தனைப் ஆசரயிப்பவர்
களின் சந்தேகமுழுமுதையும் நிவர்த்திபண்ணி அவர்களை ஆரூடபூமி
யிலேற்றிவைக்கும் பரசமர்த்தித பரமதயாளுவாய் ஏகநாயகன்
பதங்களை சர்வாராதன சம்புக்தனைகளின்று வாழ்த்தி தூரியபாதீத
பூமியையடைதற்கு ஆயத்தமாகயிருப்பவன். சிக்ஞாசு.—தத்துவ
சிந்தனவழுத்தத்தால் மாயாசத்தியின் வேதனையைப்போக்கி சிற்
சொரூபத்துக்குவேறாக யாவராலும் காணப்படாதாய் அறியப்
படாதாய் சொல்லப்படாதாய் பிரிக்கப்படடாதாய் சருவமுமாய்
சர்வஜகத்பீஜமாய் சர்வதர்மநியந்தாவாயிருக்கின்ற சிற்சத்தினை
சித்துவிலாச சிற்சொரூபமாகத்தெரிசித்து ஏகரூபத்தைத்தப்பற்றி
நின்று அதனதுசத்தியிலால் சுபேதனைகூடி விசாரனை தானமாகி
யென்னும் அப்பியாசபூமியில்நின்றும் ஆரூடபூமினையடைதற்கு
ஆயத்தமாகயிருப்பவன்.

ஆத்மா.—ஆனந்தரூபராகவிருந்தும் இதயவாயிலாகப்பிரிந்து
அவ்வானந்தங்களை நவநவமாகவனுபவித்தும் அவ்வாத்மாவின் ஏக
ரூபத்துவம் சர்வகால சர்வதேச சர்வாவஸ்தைகளிலும் மாறு
படாதிருப்பது.

மாயை.—சிற்பாவத்தால் பரமாத்மாவுக்கனன்னியமாகவிரு ந்தும் சடபாவத்தால் சத்து அசத்து சதசத்து பின்னம் அபின் னம் பின்னுபின்னம் அவயவம் நிரவயவம் அவயவா அவயவ மென்ன நவவிதரூபத்தி னின்னதென நிச்சயித்தறியக்கூடாத அவாச்சியரூபமாயிருப்பது.

ஈஸ்வரன். — சர்வாதிஷ்டான சமத்துவ ஏக பரிபூரண பர மாத்மதேவாகவிருந்தும் சத்து அசத்து சதசத்து பின்னம் அபின் னம் பின்னுபின்னம் அவயவம் நிரவயவம் அவயவா அவயவமென் னும் நவலக்ஷணங்களையுடையதாயும் அநேகபேதவாத விசித்திர ரூபமாயுமிருக்கின்ற தமதுசிற்சத்திகளையதிஷ்டித்து ஹரி சிவ விதி இந்திராதி அநேகமூர்த்திகளாகப்பிரிந்துநின்றும் தலைமைகெடாது சருவரக்ஷகளையும் பண்ணுபவன்.

பரப்பிர்மம். —நியதிசமஸ்காரவிதிப்படி சுருதிப்பிரமாணத் தாலுணர்த்திய பிர்மசாக்ஷிகளை யொருப்படுத்தி அநுபூதிநிஷ்டை யிலல் அபரோக்ஷமாக்கி அந்தஅபரோக்ஷஞானத்தால் யிதயப் பிரிவற ஏகபரிபூரணமாய்த்தெளிந்த பரப்பிர்மத்தை சிற்பிரதி பலன சிதாபாசசிவ சாயாபலத்தை நிராகரித்துநிற்கும் ஊர்த்துவ விருத்தியிலல்த் தெரிசிப்பித்து சுத்த சுபாவ சத்துவமனதிலுக் கனுபவமாக்குவது.

சாக்ஷி. — அதுவிதுவென்னுந் சடங்களும் அறிவாக அறி வைத்தருவதாய் விட்டலக்ஷணையிலை லுணர்த்தும் விஸ்வவிராட்டப் பிரபஞ்சத்துக்குப்பிரத்தேகாத்மாவாய் சத்துவரூபஜகத்காரண மாய் சாந்தவிருத்தியிலை லுணரப்படுவதாய் சத்தாதி ஒன்பதுலக்ஷ ணங்களை யுடையதாய் துவம்பதலக்ஷியராக விருக்கின்ற கூடஸ் தனை விடாதலக்ஷணவிதிப்படி சுருதிகுருவாசகத்தால் யூகித்து அனுர்தாதி தோஷத்தைப்பரிகரித்து அதுவேகமதுநிசசொரூப மென் றபரோக்ஷமாக்குவது.

பிர்மம். — அவித்தை மாயாசகித துவம்பதவாச்சியர்ன சிவேஸ்வரனைவேறுபடுத்தி அவித்தைபாநிரசன மாயாரகித தற் பதவாச்சியரான சிவேஸ்வரனையும் அவ்விருவரும் பெயர் இடம் உபாதி உடல் உணர்வென்னும் ஐந்துபிரிவுகளிலல் பரஸ்பரம் ஒவ்வாது அதிதூரஸ்தராயிருப்பதையும் அவர்கள் ஐக்கியவிரோத

உதபாஸ்தகாரணனென்பதையும் விவேகித்து எப்போதும் பந்த மில்லாது அவ்விரண்டிடத்தும் ஒருவனதேவியிருக்கின்ற பரமாத் மாவை விட்டும்விடாத லக்ஷ்மீணயிணையுணர்ந்து அவரோதற்பத லக்ஷியரான பிர்மமென நிச்சயித்து சர்வேசுர சர்வகால சர்வா வஸ்தைகளிலும் அனுபவரூபடாபுணரப்படுவது.

ஒருமை. — விலக்ஷண சலக்ஷண வாச்சிய லக்ஷிய கோசர வகோசரமுழுதும் குருவுபதேசத்தாலொருப்படுத்தி அனுபூதி நிஷ்டையிலல் ஒன்றுய்நின்றறிதரணத்தை அபரோக்ஷமாக்குவது.

விருத்தி. — சாயாபலத்தைதேவறுபடுத்தி ரூட கோட சாந்த சுத்த சுபாவமென்றைந்து வகையாகத்தொகுத்து ஆத்மாவின் சுத் தாதிலக்ஷணங்களை யுணர்த்தப்படுவது. அவற்றுள். ரூடவிருத்தி யில்: சத்தும். — கோரவிருத்தியில்: சத்தும் சித்தும். — சாந்த விருத்தியில்: சத்துச்சித்தானந்தமும். — சுத்தவிருத்தியில்: சச் சிதானந்த ஒருமையானேயகமும். — சுபாவவிருத்தியில்: ஏகபரி பூரணமுமாக வுணர்த்துவது.

சுத்தசத்துவம். — கோசரமான உள்ளத்தையும் அகோசர மானபிர்மத்தையும் ஐக்கியமாக்கி கோசரவகோசரமுழுதும் ஆனந் தரூபமாய்த்தெரிசித்து ஆனந்தசமர்த்திதராகவிருக்கும் சிவன் முத்தர்களாலனுபவிப்பது.

சுபாவசத்துவம். — பூதசரீரத்தைவிட்டு லிங்கசரீரம் பிர்ம ரூபத்திலடங்கும்போது சொரூபானுசம்பந்தமான சுத்தசத்துவ மும் பிர்மசொரூபத்திலடங்கி நிர்த்தேசுவரராகவிருக்கும் விதேக முத்தர்களாலனுபவிப்பது.

லக்ஷணை. — விட்டலக்ஷணையிணைப்பிரதிதேதாற்பரையைத் தெரிசித்து விடாதலக்ஷணையிணல் அதுவிதுவென்னும் சடங்க ளும் அறிவாக அறிணைத்தருவது: ஆத்மலக்ஷண. — தேமாருண ரதசாகுணத்தையும் தமோவிருத்தி அந்தரானவிருத்தியையும் விட்டலக்ஷணையிணல் வேறுபடுத்தி சாந்தவிருத்தியிணல் சுத்தாதி மொன்பதோடுங்கூடிய கூடஸ்தசொரூபமேதாணயிருந்தவிடாத லக்ஷணையிணல் சுத்துவாதிசுத்தியசற்குணங்களால் சரீரதிதெரித் தக்ஷணம்பண்ணப்படுவது: ஈஸ்வரலக்ஷண. — விட்டுவிடாத லக்ஷ ணையிணல் சீவேஸ்வரபேதத்தைவிட்டு அவ்விரண்டிடத்தையும்

அதிபதியாகவிருக்கின்ற ஒருவனே பரமாத்மாவெனத்தெரிந்து அவனைசர்வதேச சர்வகால சர்வாவஸ்தைகளிலும் அனுபவரூபமாயுணரப்படுவது: சொரூபலக்ஷணை.

அவஸ்தை.— தசமன் திருஷ்டாந்தத்திலுல் தூலாதியொன்பதோடுகூடிநின்ற அவித்தையா பாகத்தைவிலக்கி அறிவுருவே தாயிருப்பது: சீவாவஸ்தை.— விராட்டாதியொன்பதோடுகூடிநின்ற மாயாசகித பிரபஞ்சாபாசத்தைவிலக்கி மாயாரகித பிரத்தேகாத்மாவே தாயிருப்பது: ஈஸ்வராவஸ்தை.— அவர்தாதி தோஷத்தைப் பரிகரிக்கும்பொருட்டு அதுக்கெதிர்த்தட்டாகப் பிரிந்துநின்ற சத்தாதியொன்பதையும் ஒருப்படுத்தி கூடஸ்த சொரூபமேதாயிருப்பது: சொரூபாவஸ்தை.

ஆரோபம்.— நாமாதாம ரூபாரூப சமாசம துவயாத்துவய ஏகவநேக உணர்வுடல் ஒளியிருள் நிறைவுகுறைவென ஒன்றிரண்டை தனித்தனியேபிரித்து ஒன்றிலும்பலசித்தியில்லாமல் பிராந்தசீவர்களால் சுழலப்படுவது.

ஆதாரம்.—அதிகாசரசுயம்புவாகவிருக்கின்ற பரப்பிர்மத்தை நாமம் ரூபம் சமம் துவயம் ஏகம் உணர்வு ஒளிவு நிறைவென்னும் அஷ்டவிஷயமாகக்கோசரித்து அவைபாவும் பிர்மசொரூபமென சாந்தவிருத்தியிலுல்தெளிந்துதடையற்றசுகிகளாலனுபவிப்பது

மண்டூகதாவனம்.

இடைவிட்டு பின்னும்முன்னுந் தத்தியோடு தவளையைப்போல பத பதார்த்தங்களைவிட்டுப் பின்னதுமுன்னது முன்னதுபின்னதாகவிருக்கின்ற அர்த்தசாரங்களை அந்நுவயப்படுத்தி பூருவோத்தரபடலங்களைக் கிரமமாகவுணர்த்தப்படுவது. அவற்றுள் பூருவபடலம்.—சாஸ்திரானுபந்தம் சற்குருபோதம் அவஸ்தாநிரசனம் அகண்டேகவைக்கம் சொரூபதரிசனம் நிச்சிகசுவாநுபவமென்னச்சட்பிரகாரமாகநிரூபிப்பது.

சாஸ்திரானுபந்தம்.

சாஸ்திரம் அனுபந்தமென்னத் துவிபாகமாய் அவற்றுள். சாஸ்திரம்.— இராகவிராகரிருதயசாக்ஷியாய்ச் சருவகிரோஷ்டமான தூரியபூமியை மருவி சருவபூமியும் வியாபித்திருக்கும் ஏக

காயகன்பதங்களைப்போற்றி அவ்வதீதப்பிர்மசுகோதத்தியில் விமல போதபாஸ்கரராய் சதேதாதயமாகப்பிரகாசிக்கும் ஹரி சிவப்பிர் மாதி நித்தியசூரிகளுக்கும் முத்தாத்மாக்களுக்கும் நமஸ்கரித்து இவரவினைப் பிரிக்கக்கூடாது என் அகத்திலும் புறத்திலும் தாளைகநின்று எனதுகல்ப்பித வரத்தந்தைப்போக்கி சாசுவ சுபாவமாக்கிய ஸ்ரீபரமசற்குருவைப்பணிந்து எனக்குருவான சட்ச வைத்தந்து சரீரோந்திரியமநோபுத்திபாதி பரிச்சேதபந்தகத்தை நிவர்த்திபண்ணித் தம்போடைக்கியற்ற செய்தற்கெதுக்குரிய ஈஸ்வரசற்குருவை ஸ்திதளத்திபம்பண்ணி ஆசிரயிப்பவர் பந்த மோக்ஷ தொந்துவபேதந்தெரிந்து அனைவர்ச்சிப்பதின்பொரு ட்டு ஆதி மத்தியாந்தரகித சதேதாதயமாய்விளங்கிய குருசற்குரு வைப்போற்றி நமதுதனையர்களாகிய ஏழுஜனங்கள் வஸ்துதத் துவத்தைதுணரும்பொருட்டு பரமபண்டிதரான பரம்பராசாரியர் கள் வேதாந்தக்ஷீராப்திபில் மொண்டு சாஸ்திரத்திரயகடங்களில் நிறைப்பிவைத்திருக்கின்ற பாலைக்காய்ச்சிக் கடைந்தெடுத்துத் திரட்டி கைவல்யரவநீதமாக்கித்தந்து முத்த முருந்த கர்த்தனென் னும் நமதிஷ்டதெய்வமான விஷ்ணுதனைப்பிராப்திவித்து தத் துவவினக்கம் சந்தேதகந்தெளிதலென்னும் படலத்துரையருபமாக சம்பூரணமாக்குவது.

அநுபந்தம்.-விஷய சம்பந்த பிரயோஜன அதிகாரமென்ன நான்குபிரகாரமாக நிரூபிக்கப்படுவது. அவற்றுள்.-சமத்துவபேய பரிபூரணராயும் அவாங்மநோகோசரமாயுமிருக்கின்ற பரப்பிர்ம தத்துவம் இந்தநூல்க்கு: விஷயம்.-எந்தப்பரப்பிர்மதத்துவத்தை சாஸ்திரமுகத்தால் நிரூபித்திருக்கிறதோ அந்தப்பரப் பிர்மதத்துவமே சாஸ்திரமுகத்திலும் நிரூபித்திருக்கிறதென்று பரஸ்பரமேகீகப்படித்துவது: சம்பந்தம்.—சமஸ்தமான அநர்த்த மும் நிவர்த்தித்து ஆசிரயிப்பவருக்குத் தடையற்ற சுகத்தைத் கொடுக்கப்படுவது: பிரயோஜனம்.

அதிகாரம்.-ஊர்த்துவமுகத்தால் சரீராந்தத்தில் சர்வஸ்வா பதவியைப்பிறப்பு சம்பந்தாதி சம்பந்தங்களையுடையனாய் அழி

வில்லாதபணிசெய்யப்படுவது நித்தியமென்றும் அதோமுகத்தால் ஜனனமரண மரணஜனனமுடையனுய் கீழதுமேலது மேலது கீழதாய் சற்றேறனும்நிலைபெறுது தொந்துவரூபமான கருமச்சழக்கில் சுற்றப்படுவது அநித்தியமென்றும் நிச்சயித்தறிகிற: விவேகமும்.—அகண்டைகப்பிராப்திக்கி விரோதமான ஜகம் ஆமுஷ்டை கமிரண்டிலும் சற்றேறனும் அபேக்ஷயில்லாதிருக்கின்ற: விராகமும்.—அகக்கரணத்தை: சிக்ஷித்தல். புறக்கரணத்தை: சிக்ஷித்தல். தற்சங்கமான மானதவியாபாரங்களைக் கட்டோடு: தியச்சித்தல். தள்ளாது அநுபவித்தற்கேதுவாய் தொந்துவபிராரத்துவத்தால் வந்த சுகதுக்காதிகளில் சமசித்தமுடையனய்: திதிக்ஷித்தல். கடினமுயற்சியைப்பண்ணி சித்தத்தைவருத்தாமல் விநோதமாக சரசசமாதானத்தோடுசிரவணர்த்தங்களைமாத்திரம்:சிந்தித்தல். அகண்டைகப்பொருளை வர்த்தமானத்தில் சத்தியபலமாய்க் கொடுக்கும் சற்குரு சாஸ்திர சாதுக்களைத் தஞ்சமாகச் சினைகித்தலென்னும். சட்பேதமான: சம்பத்தும்.—இதராந்தரங்களைத்தியச்சித்து மோக்ஷமாத்திரம் அபேக்ஷித்திருக்கின்ற: மூமுக்ஷுத்துவமென்னும். சதுஷ்டையசாதன சம்பூர்த்தியாகவிருப்பது.

சற்குருபோதம்.-சற்குருவென்னும் போதகமென்னுந்துவிதம். அவற்றுள். சற்குரு.—ஆசரயிப்பவரின் பக்குவசமஸ்காரத்தைப் பண்ணி திரித்துவ திரியேயகப்பொருளைத்துலக்கி திரித்துவத்தில் ஒன்றுனதேகியை அனுபவரூபமாய்க்தெளிவித்து அந்தத்தேகிக்கி சாகாசந்திர ஸ்தூலாதருந்தி ஞாயத்தையனுசரித்துபுறம்பிலிருக்கின்ற பிர்மத்தையும்ளக்காலமும் அதைவிட்டு பிரியாமல்அகத்திலிருக்கின்ற ஆத்மாவையும் அதன்யதாப்பிரகாரம் உணர்த்துபவன்.

போதகம்—சத்தியோற்பவமான திரமசிருஷ்டியை தூலமுதல் சுபாவபரியந்தம் உண்டானவிதிப்படி யொடுக்கி பரமேஸ்வரகிருபைக்கிப் பாத்திரமாக்கி அவரதுகிருபையிலல் சாட்டியபாகம் வர்ச்சிக்குமிடத்து அத்தியாசமயக்கத்தைப்போக்கி சர்வமும் பிர்மமயமென்றுணர்த்தப்படுவது.

அவஸ்தாநிரசனம்.— அவஸ்தை நிரசனமென்னத்துவிபாகமாய் அவற்றுள். அவஸ்தை.—அஞ்ஞானம் ஆவரணம் விக்ஷேபம் படோராக்ஷம் அபரோராக்ஷம் துக்கநிவர்த்தி கடையற்றவானந்தமென்

றழுதேபதமாய் அவற்றைத் தசமன்திருஷ்டாந்தத்தாலும் ரச்சு சர்ப்ப திருஷ்டாந்தத்தாலும் உறுதிப்படுத்துவது.—பிர்மமாகும் ஆத்மாவைப்பேதமையாகமறந்தது: அஞ்ஞானம். —பரனில்லைப் பரனைக்காணேமென்று பகர்வது: ஆவரணம். — அகம் ஒருமனுஷன்ஒருகர்த்தா ஒருசிவனென்ன மாறுபாடாய்மூளைக்கப்படுவது: விக்ஷேபம்.—லக்ஷணரூபமாய்ச்சொன்ன சற்குருவாக்கியத்துக்கு லக்ஷியப்பொருளாகிய ஆத்மாயிதுவென்றுறுதிகொள்வது: பரோக்ஷம்.— தத்துவவிசாரணையால் சந்தேகமுழுமையும் நிவர்த்திக்கப்பட்டு அத்துவிதசொரூபமே தாணயிருப்பது: அபரோக்ஷம். — அகம் பாவமான சீவபேதம் வர்ச்சிக்கப்படுவது: துக்கநிவர்த்தி.—முத்தி யிருந்து செய்யவேண்டியதில்லாது செய்துமுடிந்தது: தடையற்றவானந்தம்.

தசமன்திருஷ்டாந்தம் — பிரயாசமிகுதியால்நீந்தி உதகதீரத்தேதிய பதின்மரிலொன்பதுபேரைக்கண்டுவொருவன் பிராந்தியினல் பத்தாவாகிய தன்னைத்தானென்றறியாதிருப்பது: அஞ்ஞானம்.-பத்தாவானில்லைப் பத்தாவாகனைக்காணேமென்பது: ஆவரணம்.-பத்தாவாகனைக்காணேமென்று வருத்தங்கொண்டழுவது: விக்ஷேபம்.—குறிகுணங்களோடு நிறியானன்சொல்படி ஒன்பதுபேரையெண்ணிய தான் அந்த நிறியானகனைத் தசமமாகநோக்குவது: பரோக்ஷம்.—பின்னும் அந்தப் புண்ணியனென பதிகன் ஒன்பதுபேரையெண்ணிய நீயே பத்தாவானென்ன அப்படியேநானேபத்தாவானென்று நிச்சயமாகங்காணப்படுவது: அபரோக்ஷம். — பத்தாவாகனைக்காணேமென்றுரைத்தசித்தரோகம் நிவர்த்திக்கப்படுவது: துக்கநிவர்த்தி.—மகத்தானமனதில் சந்தேகந் தெளிவது: தடையற்றவானந்தம்.

ரச்சுசர்ப்பதிருஷ்டாந்தம்.—சொற்சொரூபத்தைமறந்து பழுதை பாம்பென்னும் உதிப்பற்றிருப்பது: அஞ்ஞானம்.-பழுதைமறைந்து பாம்புருவாய்த்தோற்றியும் சுபாவீகமாய்ப் பயமற்றிருப்பது: ஆவரணம். — பாம்பு கடிக்குமென்றஞ்சி பயகம்பநிதிகளால்ப் பீடையுற்றழுவது: விக்ஷேபம். - கேள்வியினல்ப் பழுதைபிலக்கணமிது பாம்பிலக்கணமிதுவென்றுணருமிடத்து அஞ்ஞானமறதிநிக்கப்படுவது: பரோக்ஷம். — நிஷ்டாரூபமாய் பழுதை

யைப்பழுதையாக அறியுமிடத்து ஆவரணதோசம் பேதிக்கப்படுவது: அபரோகூஷம்.— முன்னம் சித்தப்பிராந்தியினல் பழுதையினிடத்துப்பாம்பாகத்தோற்றிய விவிதவிதேகூஷபம் வர்ச்சிக்கப்படுவது: துக்கநிவர்த்தி.—நிர்ச்சந்தேகமுப்ப் பழுதையைப்பழுதையென்றறிந்து சுபாவசொரூபமாய்க் கலக்கமற்றிருப்பது: தடையற்றவானந்தம்.

நிரசனம்.-அஞ்ஞானம் ஆவரணம் விதேகூஷபமென்னும் மூன்றவஸ்தைகளையும் பரோகூஷ அபரோகூஷ துக்கநிவர்த்தி பென்னும் மூன்றவஸ்தைகளால் சாகூஷித்துவ சயேகத்துவபூரணத்துவமென்னும் மூன்றுலகூஷணத்தைக்கொண்டு நிவர்த்தித்திருக்கின்றஞானி சர்வ சிரேஷ்டமான தடையற்றசுகத்தையனுபவிக்கப்படுவது.

அகண்டேடகவைக்கியம்.— அகண்டேடகம் ஐக்கியமென்னத் துவிபாகமாய். அவற்றுள். அகண்டேடகலகூஷணம். — சீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் தேச கால நாமரூப தேகவுணர்வாதிகளில் அளவற்ற தாரதம்மியமிருப்பினும் கண்டமில்லாது அவ்விரண்டிடத்துஞ் சமமாகவிருக்கின்ற பரமாத்மா ஒருவனே யென்றுணர்த்துவது. ஐக்கியலகூஷணம்.— ஆகாயதிருஷ்டாந்தத்தால் சீவேஸ்வரகூடஸ்தபிர்மமென்னுங் கல்ப்பனை நாமத்தையகற்றி தற்பதத்துவம்பத சாகூஷி சைதன்யங்களை யொருப்படுத்தி சருவமும் சைதன்யசிதாகாசமாய்த்தெரிசிப்பது,

தொரூபதெரிசனம்.-தொரூபம்தெரிசனமென்னத் துவிபாகமாய் அவற்றுள்.தொரூபலகூஷணம். — அநாத்த சட துக்க அசம அத்திர அபிமான அதேக அநித்திய அபூரணமென்னும் நவதோஷங்களையுடைய பஞ்சகோச குத்திரக் குகையிலிருக்கின்ற சீரியை அதைவிட்டுப்பிரத்தேகமும்படி ஆகரிஷித்து சத்து சித்து ஆனந்தம் சமந் திரஞ் சாகூஷி ஏகம் நித்தியம் பூரணமென்னும் நித்தியதோஷமான நவலகூஷணங்களோடுங்கூடிய ஆத்மாவைத் தாரகமாக்கி அதுவே உனது தொரூபமென்றுணர்த்தப்படுவது.

தெரிசனலகூஷணம்.—சற்குருவாக்கியப்படி தத்துவமார்க்கத்தைப்பிசகாமல் சரீர பிராண மதேயுத்தி சிவனென்கின்ற பஞ்சகோசத்தைக்கடந்து அதன்முடிவிலிருக்கின்றபாழானயிருட்டைத்தள்ளிபஞ்சகோசசூனியங்களையுணருங்கிஞ்சித்துவயிருப்புமிட்டு

கூடஸ்தம் பிர்மமென்கின்ற நடுவணைநழுவி ஒன்றாய்நின்ற பூரணத்தையுணரப்படுவது.

நிச்சிதசுவாநுபவம்.-நிச்சிதம் சுவானுபவமென்னத் துவிதம். அவற்றுள். நிச்சிதலக்ஷணம். — வித்து வரன் வரியான் வரிஷ்டனென்கின்ற நாமசதுஷ்டயமும் செய்தல் செய்வித்தல் அறிதல் சுகித்தலென்கின்ற விவகாரசதுஷ்டயமும் சத்துவாபத்தி அசம்சத்தி பதார்த்தாபாவனை துரியமென்கின்ற பூமிசதுஷ்டயமும். சற்சங்கசம்பூர்த்தியானமனதில்அதிஷ்டானஞானம்உதயமாவது. அவ்வதிஷ்டானவழுத்தத்தால் ஆரோபிதகல்ப்பிதத்தைதமறந்திருப்பது. அத்துவிதானந்தசம்பூர்த்தியிலல் திரிபுடிநிவர்த்தமாவது. இருந்தபடியேயிருக்கின்ற வஸ்துசொரூபத்தை மௌனசுபாவத்தால் இருந்தபடியே அனுபவிப்பதென்கின்ற அனுபவசதுஷ்டயமும். இந்தப்பதிறுபேதமான சீவன்முத்திலக்ஷணமும் துரியாதீதவாசிகளான ஹரிசிவப்பிர்மாதி நித்தியசூரிகளாலனுபவிக்கும் விதேகமுத்திலக்ஷணமும் அதன்யதாப்பிரகாரம் உணரப்படுவது.

சுவாநுபவலக்ஷணம்.-அதிகார சற்குரு ஐக்கிய ஞானமென்கின்ற திரித்துவத்தைத் துலக்கி திரியேகப்பொருளாகிய உனது நிசசொரூபத்தை மறவாதேயென்று ஆணைவைத்துநிறுத்தி வாக்கியாநுசந்தானம் அர்த்தாநுசந்தானம் சொரூபாநுசந்தானமென்னும் அனுசந்தானத்திரயரூபமாய் சருவசங்கேதகங்களையும் நிவர்த்திபண்ணி பூரீபகவானுகியசற்குருகிருபையினல் ஆனந்தசம்பூர்த்தியை யடைந்திருப்பது.

உத்தரபடலம்.

நியாயத்திரயம் பிர்மக்ஞானம் ஆருடலக்ஷணம் ஈஸ்வரசாமியம் மாயாரூபம் ஆத்மரூபம் பூமித்துவயம் விராகத்திரயம் சாஸ்திர சம்பூரணமென்னும் நவவிஷயமாகநிரூபிக்கப்படுவது.

நியாயத்திரயம்.-தூணைகம்ப மற்கட யெந்திரஸ்காபனமென்னத்திரிவிதம். அவற்றுள். தூணைகம்பநியாயம்.—பூர்வபடலத்தில் பரப்பிர்மதத்துவத்தைவிளக்கி அதில்ப்பற்றிநிற்கும் அதிகாரியின் மனோவிருத்தியை அழுக்கழுறவற்புறுத்தி சற்றேறனும் அசையாது திரநிலைபெறுதற்பொருட்டு சங்கேதகந் தெளிதலென்னும் உத்தரபடலத்தைச் சொல்லப்படுவது. மற்கடநியாயம். — கல்ப்

பிதஜனகமான பாஞ்சபூதவிகாரந்தொடங்கி நிர்க்குணரூபமான விதேகமுத்திபரியந்தம் அனுக்கிரகித்த ஸ்ரீசற்குருவை விடாமல் சற்சிந்த ஞான சதாசார பரதந்திர சிதேகதத்துவ சம்பந்தமென்னுஞ் சடுலக்ஷணங்களால்ப்பிரிவற்று சதா அனுசரித்துநிற்பது. யெந்திரஸ்தாபனநியாயம்.— அக்ஞானவிபரீதங்கள் போலவும் இனிமேல் வருமோவென்றெண்ணும் அதிகாரியின்சந்தேகத்தை சுருதிகுருசுவாநுபவரூபமாய் எக்காலமும் வாராதபடி நிவர்த்திக்கப்படுவது.

பசியென்கிறதொருப்பானது யேழைகள் தேகத்திணட்பத்தி யெரிகின்றபோது ஆகாரத்தாலவிக்கின்றதுதான்: சிவகாருண்யம் கடவுள் இயற்கைவிளக்கத்துக்கிடமாகிய சிவதேகங்களென்கிற ஆலயங்கள் பசியிறப்பாழாகுந்தருணத்தில் ஆகாரங்கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ்செய்வதே: சிவகாருண்யம்.—கடவுள் இன்பத்தைப்பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித் தனஞ்செய்கின்ற சீவராசுதத்துவக்குடும்பழுழுதும் பசியினல் நிலை தடுமாறி அழியுந்தருணத்தில் ஆகாரங்கொடுத்து அக்குடும்பமுழு தும் நிலைபெறச்செய்வதே: சிவகாருண்யம்.—பசியென்கிறபுலி யானது யேழையிர்களைப்பாய்ந்து கொல்லத்தொடங்கும்தருணத் தில் அப்புலியைக்கொன்று அவ்வுயிரைரட்சிப்பதே: சிவகாருண் யம்.— பசியென்கிறவிஷந் தலைக்கேறி சீவர்கள்மயங்குந்தருணத் தில் ஆகாரத்தாலவ்விஷத்தைதயிரக்கி மயக்கந்தெளியச்செய்வதே: சிவகாருண்யம்.— பசியென்கிற கொடுமையாகியதேள் வயற் றிற்புகுந்து கொட்டுகின்றபோது கடிப்பேறிக்கலங்குகின்ற ஏழை களுக்கு ஆகாரத்தாலக்கடிப்பைமாற்றிக் கலக்கத்தைத்தீர்ப்பதே: சிவகாருண்யம்.— நேற்று இராப்பகல்முழுதும் நம்மை அறைப் பங்குகொன்றுநின்ற பசியென்கிறபாபி இன்றும்வருமே இதற் கென்னசெய்வோமென்று ஏக்கங்கொள்கின்ற ஏழைச்சீவர்களது ஏக்கத்தைதீர்க்குவதுதான்: சிவகாருண்யம்.— வெய்யிலேறிப் போகின்றதே இனிப்பசியென்கின்ற வேதனைவந்து சம்பவிக் குமே இந்தனிதிவசத்திற் கென்னசெய்வதென்று தேனில்விழுந்த

சையப்போலத்திகைக்கின்ற ஏழைச்சிவர்களுடைய திகைப்பை நீக்குவதுதான் சிவகாருண்யம்.— இருட்டிப்போகின்றதேதனினி ஆகாரத்தைதக்குறித்து எங்கேபோவோம் யாரைக்கேட்போம் என்னசெய்வோமென்று விசாரத்திலழுந்திய ஏழைச்சிவர்களது விசாரத்தைதமாற்றுவதே: சிவகாருண்யம்.— நடந்து நடந்து காலுஞ்சோர்ந்து கேட்டுக்கேட்டுவாயுஞ்சோர்ந்து நினைத்து நினைத்துமனமுஞ்சோர்ந்து இனியிப்பாவிவயற்றுக்கென்னசெய்வோமென்று கண்ணீர்வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங்கொடுத்துக் கண்ணீரைமாற்றுவதே: சிவகாருண்யம்.— பகற்போதும் போய்விட்டது பசியும்வருத்துகின்றது வேறிடங்களிற்போக வெட்கந்தடுக்கின்றது வாய்திறந்துகேட்க மானம்விலக்கின்றது வயறுயெரிகின்றது உயிர்விடுவதற்கும் உபாயந்தெரியவில்லை இவ் வுடம்பையேன் எடுத்தோமென்று மனமும் முகமுஞ் சோர்ந்து சொல்வதற்கும் நாவெழாமல் உற்பாத சொப்பனங் கண்ட ஊமையைப்போல மனமருகுகின்ற மானிகளாகிறசிவர்களுக்கு ஆகாரங்கொடுத்து மானத்தைக்காப்பாற்றுவதே: சிவகாருண்யம். நாம்முன்பிறப்பில் பசிக்குறிப்பறிந்து பசியைநீக்கியிருந்தால் இப்பிறப்பில் நமதுபசிக்குறிப்பறிந்து பசியைநீக்குவதற்குப் பிறி தொருவர்நேர்வார் அப்போது அப்படி நாம்செய்ததில்லை இப் போது இப்படி நமக்குச்செய்வாருமில்லையென்று விவகரித்துக் கொண்டு தூக்கம்பிடியாமல் தூக்கப்படுகின்ற ஏழைச்சிவர்களுக்கு ஆகாரங்கொடுத்து தூக்கத்தைதீக்கி தூக்கம்பிடிக்கவைப்பதே: சிவகாருண்யம்.— தேகமுழுதும் நரம்புகள்தோன்ற பசியிருளினழுத்து உயிரொடுங்கி மூர்ச்சைமூடியகாலத்தும் அயலாைக்கேட்பதுதுணியாமல் கடவுளை நினைத்துநினைத்து நெருப்பிற்படுத்து நித்திரைசெய்யத்துடங்குவாைப்போல அடிவயற்றிற் கொடிய பசி நெருப்பைவைத்துப் படுக்கத்தொடங்குகின்ற தூக்காத்மா வுக்கு ஆகாரங்கொடுத்து அந்தப்பசிநெருப்பை மாற்றுவதே: சிவ காருண்யம்-— நேற்றுப்பட்டினிகிடந்ததுபோல இன்றும் பட் டினிகிடப்பது எப்படி நாம் பால்யவசத்தால் இன்றும் பட்டி னிகிடக்கத்துணிவோமாயினும் பட்டினிசகியாத நமது ஏழை மனவிவயற்றுக்கு யாதுசெய்வோம் இவள்பசியைக்குறிப்பதும்

பொறுத்தல்ல வார்த்திபதிசையால் மிகவுஞ்சோர்ந்த நமதுதாய்தந்
தைதகள் இன்றும்பட்டினிகிடந்தால் இறந்துவிடுவார்களே இதற்
கென்னசெய்வோம் பசியினலழுதழுது நமதுபுத்திரர்களது சோர்
ந்தமுகத்தை எப்படிப்பார்ப்போமென்று எண்ணி எண்ணிக்
கொல்லுலையின்மூண்ட நெருப்பைப்போல பசிநெருப்பும்விசார
நெருப்பும் உள்ளேழுண்டுபடியிருக்கக் கன்னப்புடையிற் கைகளை
வைத்துக்கொண்டு கண்களில்நீர்ததும்ப வருந்துகின்ற ஏழைக
ளுக்கு ஆகாரங்கொடுத்து வருத்தத்தைதமாற்றுவதே: சிவகாருண்
யம்.— கண் கை கால்முதலிய உறுப்புகளில் குறைவில்லாதவர்
களாகி ஆகாரஞ்சம்பாதிக்கத்தக்க சக்தியுள்ளவர்களும் பசியால்
வருந்தி இதோபடுத்திருக்கின்றார்கள் குருடும் செவிடும் ஊமை
யும் முடமுமாகவிருக்கின்றநமக்கு ஆகாரம் எந்தவழியாற்கிடைக்
குமென்று தனித்தனி நினைத்துநினைத்து துக்கப்படுகின்றவேழை
களுக்கு ஆகாரங்கொடுத்து துக்கத்தைதீக்குவதே:சிவகாருண்யம்.-
பசியினல்வருந்துகின்றவர்கள் எந்தத்தேசத்தாராயினும் எந்தச்
சமயத்தாராயினும் எந்தச்சாதியாராயினும் எந்தச்செய்கையாரா
யினும் அவர்கள் தேசவொழுக்கம் சமயவொழுக்கம் சாதியொழு
க்கம் செய்கையொழுக்க முதலானவைகளைப்பேதித்து விசாரி
யாமல் எல்லாச்சீவர்களிடத்தும் கடவுள்விளக்கம் பொதுவாக
விளங்குவதையறிந்து பொதுவாகப்பார்த்து அவரவரொழுக்கத்
திற்குத் தக்கபடி அவர்கள்பசியை நிவர்த்திசெய்விப்பதே: சிவ
காருண்யம்.— பகைவராலெறியப்பட்டு மார்பிலுருவிய பாணத்
தையும் கையாற்பிடுத்துக்கொண்டு எதிரிட்டபகைவனையல்லாம்
அஞ்சாது ஒருநிமிஷத்திற்கொல்லத்தக்க சுத்தவீரரும் கல்வி
கேள்விகளில் நிறம்பி அறிதற்கரியபரமபதங்களையறிந்து செய்தற்
கரியசெய்கைகளைச்செய்து முடிக்கவல்லவர்களும் பசிகோரிட்ட
போது அறிவுங்கருத்துமழிந்து தடுமாறுகின்றார்கள் இராப்பகல்
தேனன்றது புளிச்சியின்படித்திற்பொங்குகின்ற காமிகளும் பசி
கோரிட்டபோது புளிச்சியைமறந்து காமத்தைத்தள்ளி கலங்கு
கின்றார்கள் காமேமெரியர் நமக்குமேல்ப்பெரியரில்லையென்று
இருமாப்படைகின்ற அகங்காரிகளும் பசிகோரிட்டபோது அகங்
காரங்கொலைந்து ஆகாரங்கொடுப்பவனைப் பெரியவராகப்புகழ்

கின்றார்கள் இவரிவரிப்படியானல் ஒருவகைஆதாரமுமில்லாத ஏழைகள் பசிநேரிட்டபோது என்னபாடுபடார்கள் அந்தக்காலத்தில் அந்தஏழைகளுக்கு ஆகாரங்கிடைத்தால் எப்படிப்பட்ட சந்தோஷமுண்டாகும் அந்தச்சந்தோஷத்தைத் தோற்றிவித்தவர்களுக்கு எப்படிப்பட்டலாபங்கிடைக்கும் இப்படிப்பட்டதென்றுசொல்லுதற் கருமையென்றறியவேண்டும்.— பசித்தவர்க்குப் பசியைநீக்குகின்ற விஷயத்தில் புருஷனைப்பெண்சாதிதடுத்தாலும் பெண்சாதியைப் புருஷன்தடுத்தாலும் பிள்ளைகளைத்தந்தைதடுத்தாலும் தந்தையைப்பிள்ளைகள்தடுத்தாலும் சிஷ்டைஆசாரியர்தடுத்தாலும் அடியார்களை ஆண்டவன்தடுத்தாலும் குடிகளை அரசன்தடுத்தாலும் அந்தத்தடைகளில் சிறிதுந்தடைப்படாமல் பசித்தவர்களுக்குப் பசியையாற்றுவித்து இன்பத்தையுண்டுபண்ணுகின்ற சிவகாருண்யவொழுக்கமாகிய மேலானவிரதம் கடவுளாக்கினையானதால் இதனைப் புத்திமான்கள் தீர்க்கமாகச் சாதிக்கத்தக்கது.

விதரணை.—ஸ்ரீபகவானுகிய வாசுதேவசற்குருநிருபையினல் நிரூபகதிருஷ்டியில் விருத்தியொடுக்கம் நீததிருஷ்டியில் விருத்திக்ஷயம் சயோகதிருஷ்டியில் வஸ்துநிர்த்தேசம் சம்பந்ததிருஷ்டியில் சற்குருலாபம் வியவகாரதிருஷ்டியில் பூமித்துவய ஐஸ்வரியமுன்சித்தித்து இதயசீதளமிகுத்திருக்கின்ற விதரணன் சமஸ்தபூமியின்வியவகாரங்களையும் பூரணவாத்தரமாகத்தெரிந்து எவ்வளவும் பிரயாசமில்லாமல் விளையாட்டாக நடத்தப்படுவது.

பூர்வக்கிரிகை.

கற்பாதானம் பும்ஸவனம் சீமந்தம் உன்னயனம் சாதகர்மம் நாமகரணம் உபநிஷ்கிரமணம் அன்னப்பிராசனம் சௌளம் உபநயனம் மகாநாமியம் மகாவிரதம் உபநிஷத்து சோபனம் உத்துவாகனம் மிருதியென்னச் சோடசகர்மம்: பூர்வம். அவற்றுள். — ஸ்ரீபகவானுகிய வாசுதேவப்பிரார்த்திதராய் வம்சாபிவிருத்தியின் பொருட்டு பாரிகையினிடத்தில் மிதுனபூர்வகமாகக் கற்பத்தைத் கொடுப்பது: கற்பாதானம். — வாசுதேவக்காப்பினல் யாதொருவிக்கினமுமில்லாமல் புத்திரகற்பத்தைத்தினேதினேபரிபாலனம்

பண்ணுவது: பும்ஸவனம்.-நாசிகைத்துவாரா பிராணசஞ்சீவியைப் பூரித்து அதனிடத்தில் ஸ்ரீபகவான் தனதம்சத்தைவைத்து கற்ப சீமந்தஞ்ய் மாதாவைமுன்னிட்டு வகடுகீறி தினேதினே நித்திய ஆஸ்தியை அபிவிர்த்திபண்ணுவது: சீமந்தம்.-பூப்பிரவேசமாதற் பொருட்டு ஸ்ரீபகவான் இமையைத்திரந்து புத்திரலோஜனத்தை விளக்கப்படுவது: உன்னயனம்.— பூபதனமானமாத்திரம் வாசு தேவப்பிரார்த்திதராய் புத்திரோத்ஸவங்கொண்டாடி உற்பவக் கிரிகையை நடத்தப்படுவது: சாதகர்மம்.—வாசுதேவைப்பிரார்த் தித்து சந்நிதிபூர்வகமாக ரம்மியப்பெயரைச் செய்யப்படுவது: நாமகரணம். — வாசுதேவைப்பிரார்த்தித்து இருத்தல் தவழ்தல் நடத்தல்முதலிய பருவக்கிரிகைகளை நடத்தப்படுவது: உபநிஷ்கிர மணம்.—வாசுதேவப்பிரசாதத்தை பிரார்த்தனைரூபமாய் ஊட்டி வைப்பது: அன்னப்பிராசனம். — வாசுதேவைப்பிரார்த்தித்து சிகாவிவாகத்தை வர்ணனைரூபமாய் நடத்தப்படுவது: சௌளம்.— திவ்வியசகூஷுவைக்கொடுத்து ஸ்ரீபகவான் தமதுநிசசொரூபத்தை யுணர்த்தப்படுவது: உபநயனம்.—ஸ்ரீபகவானுகிய வாசுதேவினல் அந்தராத்மாவை சம்பந்தாஸ்ரூபமாகவிளக்கி நீயே ஸ்ரீவாசுதேவ னென்னும் நித்தியநாமத்தைத் தரிக்கப்படுவது: மகாநாமியம்.— வாசுதேவகிருபையினல் எவ்வளவும் வழுவாமல் பிர்மசரிதநிஷ் டையைக் காப்பாற்றப்படுவது: மகாவிரதம்.—ஸ்ரீபகவான் சர்வ வேதசாரமாகிய திரிபேதப்பொருளையுணர்த்தி கிரகஸ்தனதற் பொருட்டு பூர்வாச்சிரமத்தை சமர்த்திபண்ணுவது: உபநிஷத்து.- வாசுதேவகிருபையினல் அவரவர்க்குரிய கன்னிகையை விதிபூர் வகமாகக் கல்யாணஞ்செய்யப்படுவது: சோபனம்.—சிவன்முத் தனய் காரிகஸ்தகர்மத்தை விதிபூர்வகமாகநடத்தி சர்வசிரேஷ்டர் களான சிவன்முத்தர்களின் அடியார்களுக்கெல்லாம் அடிமையாக நின்று சமஸ்தமானதேவர்களும் பலவாரான வேதகோஷ்டங் களோடு சந்தோஷிக்க சேவிதப்பிரயோஜன பாவனைரூபத் தைப்பெற்று பூர்வக்கிரிகையை விதிபூர்வகமாகப் பரித்தியாகம் பண்ணுவது: உத்துவாகனம்.—வர்ணனைரூபமாக அபரக்கிரிகை யைச்செய்து வாசுதேவகிருபையைப்பெற்று உஜ்ஜீவிக்கும் பொருட்டுத் தனதுசரீரத்தைப் புத்திரபௌத்திராதிகளுக்

கொப்புவித்து எப்போதும் இருந்தபடியேயிருக்கினற விதேகப் பிராப்தியையடையப்படுவது: மிருதி.

அபரக்கிரிகை.

ஆரம்பம் சமஸ்காரம் சஞ்சயனம் பாஷாணகிருத்தியம் ஏக வோமம் நவசிராத்தம் சோதகும்பம் ஊனம் மாசிகம் சபிண்டீ கரணம் கோதானம் ஆப்தீகம் கிரகயெக்ஞம் வருஷாப்தீகம் சதா வந்தனம் வாசுதேவசமர்ப்பணமென்ன சோடசகர்மம்: அபரம்.

ஆரம்பம்.— அகிலமங்கள குணசொரூபனகிய ஸ்ரீசருதேவ் வானதுகிருபையிஞல் சிவனிறக்கும்வித்தையும் இறந்தவுடனே வாயுசரீரம்பெற்று யமதூதர்களோடு யமலோகஞ்சார்ந்து கணப் பொழுதில்மீண்டு சவத்தினருகேவந்து இடம்பையடைதலையும் கிருத்தியம் செய்யவேண்டிய விதத்தையும் பத்துநாட்பிண்டங்க ளால் சிவன்சரீரம்பெறுதலையும் பதின்மூன்றுநாள் யமதூதர் பிண்டசரீரம்பெற்றசிவனை பாசத்தால்பிணித்து நாலொன்று க்கு இருநூற்றுச்சொச்சங்காதவழிதூரம் ஓராண்டுவரையிலும் நடத்திச்செல்லுதலையும் பூலோகத்துக்கும் யமபுரிக்கும் இடை யிலுள்ள எண்பத்தாறுயிரகாதவழியில் சூரிபோன்ற இலைகளை யுடைய அசிபத்திரவனமும் உருக்கிவிட்ட செம்புபோலக்காந்தும் இடமும் அதிகஉஷ்ணமுங்குளிருமுள்ள இடங்களும் இருளுள்ள இடமும் சிலாவருடமுடையஇடமும் இருத்தலையும் சியாலும் இரத்தத்தாலும்நிறைந்து பாபிகளுக்கும் அப்பாபிகளை வகை செய்யப்பலவகைதண்டுக்களுக்கும் ஸ்தானமாய் வைதரணிநதி கிடத்தலையும் யாமியம் சௌரி கந்தருவநகரம் குணரம் நிலைஞ் சம்விசித்திரம் பக்வாபதம் துக்கதம் நாரகக்கிரந்தம் சூகப்புரம் சீதாப்ரம்மன்றபட்டணங்களில் யமதூதர்கட்டளையால் சிவன் சிறிதுபொழுதுதங்கி மாசிகபிண்டங்களையுண்ணுதலையும் மேற் சொன்னவற்றில் விசித்திரமென்றநகரஞ்சார்ந்து வகனஷோனன் மாசிகபிண்டத்தையுண்டு ஏழாமாசிகபிண்டத்தையுண்ணுங்காலை நிலபிசாசங்கள்வந்து அப்பிண்டத்தைக்கவர்ந்துகொள்ளுதலையும் சிவன் யமபுரிக்கருகில்சாரலும் பிண்டசரீரம்நீங்கி அங்குஷ்டப் பிரமாணமாய் ஒருவன்னிமரத்தில் சற்றுதங்கி கருமதூதாலாகிய சரீரம்பெற்று யமன்முன்புபோதலையும் யமபுரியின்தன்மையை

யும் யமனுடையஅரண்மனையும் யமன்வீற்றிருக்கின்றமண்டப மும் சித்திரகுப்தன் அரண்மனையும் மகாரோகங்களின் நிரகங் களும் நரகங்களின்பெயருமாகிய இவற்றின்பெற்றிமையையும் பாபஞ்செய்தசீவர்கள் உலக்கையால்மொத்துண்டும் ஆயுதங்களால் சிதைக்கப்பட்டும் சுரிகையால்சீவப்பட்டும் செக்காலாக்கப்பட் டும் நெருப்பில்வாட்டப்பட்டும் செம்பினுல்செய்யப்பட்டுத் தப்த மாயிருக்கின்ற ஆண்பாவைபெண்பாவைகளோடுசேர்க்கப்பட்டும் கரும்பைப்போல ஆலையில்கொடுக்கப்பட்டும் நரகங்களில்த் தள்ளி அழுத்தப்பட்டும் துன்பப்படுதலையும் இன்னபாபஞ்செய்தவன் இன்னஜன்மமடைகின்றனனென்பதையும் இன்னபாபஞ்செய் தவன் நரகம்அனுபவித்து இன்னகுறிப்போடு பிறப்பானென் பதையும் இன்னதீவினையால் கொடிதாகியபிரேதஜன்மம் வரு மென்பதையும் நித்தியசிரார்த்தமும் வருடசிரார்த்தமுஞ் செய்ய வேண்டியவிதியையும் கருமஞ்செய்யாவிடின் மரித்தசீவன் துன்ப ப்படப் பிரேதசன்மமடைந்து குலநாசஞ்செய்தலையும் கரும ஞ்செய்யப்பட்டால் சீவன்இனிதாய்ச்சென்றுஇன்புற்று சுவர்க்க வாசஞ்செய்து குலத்தோனைஆசீர்வதித்தலையும் நல்வினைசெய்த சீவன் உத்தம உலகுஅடைதலையும் சீவன் நல்லுலகடையயேது வாகிய பூதானம் சொன்னதானம் கோதானம் பரித்திதானம் சய் யாதானம் இரும்புத்தானம் திலதானம் தீபதானம் உப்புத்தானம் கடதானம் பததானம் விருஷோர்ச்சர்க்கம் நாராயணபலி முதலி யவை செய்யவேண்டியவிதியையும் பிறத்தலுக்கும் இறத்தலுக் கும் ஆசௌசமுள்ளவிதத்தையும் துன்மரணம் அடைந்தவனு க்கு இன்னகாலத்தில் இவ்விதங்கருமஞ்செய்யவேண்டுமென்பதை யும் சங்கியாசமும் பிராயோபவேசமும் சகமனமுமாகிய இவற் றின்மேன்மையையும் பின்னும் சிவனுக்கு உறுதியாயவற்றையும் வீடுபேற்றிற்கு நிமித்தமாயவற்றையும் ஆதியோடந்தம் ஆராய்ச் சிபண்ணி மந்திர திரவிய கிரிகை பாவன பக்தி ஞானமுதலிய தால் சற்றேறுனும்வழுவுதல்வாராது உத்தரக்கிரிகையைச் சக்தி யானுசாரஞ்செய்யத்தொடங்குவது.

சமஸ்காரம்.— பைத்திரமேத பிர்மமேதமென்னும் உபய மார்க்கவிதியைத்தெரிந்து தந்தம் அதிகாரானுரூபமாய் தகனஞ்

செய்வது. பைத்திரமேதசமஸ்காரம்.— தத்தங்குலாசாரதர்மத் தைத்தழுவி தெக்ஷிணையனமார்க்கவிதிப்படி பிதிர்கருமத்தைச் செய்யப்படுவது. பிர்மமேதசமஸ்காரம்.— ஞானசிரோஷ்டனை பிதாவுக்கு பூருவசித்தாந்தத்தைத்தெரிந்து உத்தராயனமார்க்க விதிப்படி ஞானபுத்திரனற்செய்யப்படுவது.

அவயவாஸ்தியை ஒருப்படச்சேர்த்து மந்திரபூர்வகமாக பிரோ தாக்கினியையவித்து புண்ணியதீர்த்தத்திற் சேர்க்கப்படுவது: சஞ்சயனம்.— பிதிராதிகளைப் பிரேதாகாரமாகச் சிலாரூபத்தில் வரித்துப் பிரேதசப்தவாச்சியப் பிரயோகக்கிரிகையை நடத் தப்படுவது: பாஷாணகிருத்தியம்.— அவயவாதிகளைப்பிரித்து அன்னதிரூபத்தாலாகுதிபண்ணுவது: ஏகவோமம்.— வாசனை தேகத்தைத் துவாரமுகத்தால் சுத்திகரிக்கச்செய்வது: நவசிரா ர்த்தம்.— தாகோபசமனர்த்தஞ்செய்வது: சோதகும்பம்.—இரு பத்தைந்தாநாள் நாற்பத்தைந்தாநாள் ஆறுமாசபன்னிரண்டா மாச தானகட்டங்களில் விடாயாத்தியின்பொருட்டு சிரமபரிகா ரார்த்தஞ்செய்வது: ஊனம்— மார்க்கவேதனைவாராமல் அதற்கு வேண்டும் சகாயசாதனக்கருவிகளை மாசந்தோறுஞ்செய்வது: மாசிகம்.— பிரேதஜன்மம்வர்ச்சித்து பிதிருருவத்தைப்பெற்று பிதாவை பிதிர்க்களோடுசேர்ப்பித்தற்பொருட்டுச் செய்யப்படு வது: சபிண்டீகரணம்.— வைதருணியைத்தாண்டிப் பிதிருருவத் தைப்பெற்று பிதாபிதிர்லோகத்தைச்சேரவும் பிதாவுக்குப் பிதா மகபிதாவானவன் விண்ணுலகத்தைச்சேரவுஞ் செய்வது: கோதா னம்.- விஷ்ணுவிஸ்வதேவிநீடு பிதாபிதாமகபிதிர்பிதாமகனைப் பிராம்மணமுகமாகவரித்து சர்வோபசாராதிகளாற் பூசித்து தேவதினத்தைப்பூர்த்திபண்ணுவது: ஆப்தீகம்.— கோசல கோ மய க்ஷீர ததி சத்பியென்னும் பஞ்சகௌவ்ய குலோதகங்க ளால் அகத்தையும் புறத்தையும் பவித்திரமாக்குவது: நர க யெக்ஞம்.— விஷ்ணுவிஸ்வதேவிநீடு பிதாவாதிகளை வருஷந் தோறும்வரித்து வாக்குத்தத்தம் மனோதத்தம் கிரியாதத்தம் தாராதத்தமுதலியவைகளால் பக்திபூர்வகமாகச் சக்தியானுசாரஞ் செய்வது: வருஷாப்தீகம்.— ஞானதீக்கத்தால் மாதா பிதா குரு தெய்வமுதலான சமஸ்தமும் வாசுதேவமயமாகத்தெரிசித்து எப்

போதும் ஸ்தெளத்தியம்பண்ணுவது:சதாவந்தனம்.— மாதுருப் யோ பிதிருப்யோ குருப்யோ சருவோப்யோ சருவதேவதாப் யோநம:வென்று ஸ்ரீபகவானிடமாகத் தன்னுடஆத்மாவை சமர்ப் பணம்பண்ணி சீவன்முத்தனய் நித்தியசீவனைப்பெற்று கிருதகிரு த்தியனய்த் தடையற்று விளங்குவது: வாசுதேவசமர்ப்பணம்.

மீமாம்சதாந்திரீகம்.— கர்மோபாசனையே ஞானசாதகமென் றும் உபாசனைக்ஞானமே கருமசாதகமென்றும் கருமக்ஞானமே உபாசனைசாதகமென்றும் திரிகாண்டங்களும் பரஸ்பரசாதன பரஸ்பரசிரோஷ்டத்தையும் விதிக்கப்படுவது.

மீமாம்சவபிப்பிராயம்.— ஒவ்வொருகாண்டத்தை சித்தாந்த ப்படுத்தி மற்றயவிரண்டும் பூருவபக்ஷமென்பதுவும் திரிகாண் டங்களும் சித்தபக்ஷமென்பதுவும் அதிகாரானுரூபமாய் விளிப் படுத்தி அதன் பிரயோஜனமாகிய இகபரமோக்ஷசுகத்தைத் தனித் தனியேபெறுதற்குரியன்காண்டத்திரயவதிகாரியெனவும் அதனை ஸ்ரீசற்குருமுகமாகவொருங்கேபெருதற்குரியன் சம்பூரணவதி காரியெனவும் மீமாம்சயிருதயத்தை யதாப்பிரகாரம் விவேகித் துணர்வது.

சிரோஷ்டன்.— ஈஸ்வரானுக்கிரகத்தால் தேச கால பிரகார அதிகார பலமுதலிய நியமங்கள் மாறுபட்டு ஞானசக்தியாதி சாட்குண்ய சித்தியைப்பெற்று சர்வதிருப்தனாகபொதுபொதுச் சிறப்பு சிறப்பென்கின்ற தேவநியமனத்தைதக்கைக்கொண்டு ஆசி ரதரக்ஷணம் பண்ணுதற்கு சதாகங்கணங்கட்டிக்கொண்டிருப் பவன். அவற்றுள்.பொதுரக்ஷகம்.— திரிகரணத்தாலாகிலும் அல்ல தொருகரணத்தாலாகிலும் சுசக்தியிழந்து யதார்த்தமாக சரண் கதிபண்ணுபவன் யாவனையிலும் அவனதுவிபத்தைதீக்கி அபயப் பிரதானசுகிதமாய் ரக்ஷிக்கப்படுவது. பொதுச்சிறப்புரக்ஷகம்.— பரமதர்மமான அகிம்சா சத்தியமுதலிய நீதிவழியில்நடப்பவனை அன்னியன் அனன்னியனெனப்பாராமல் தர்மசாஸ்திரவிதிப் படி ரக்ஷிக்கப்படுவது. சிறப்புரக்ஷகம்.— தாரதனைய தாச ஆசிர தர்களின் பக்குவாபக்குவ குணகுற்றங்களைப் பரீக்ஷித்து விலக் காமல் அவர்களை நாணுவிதவுபாயபூர்வகமாய்த்திருத்தி சிக்ஷை பூர்த்தியாதிகளினால் ரக்ஷிக்கப்படுவது.

தீனன்.

இக பர மோகூக வாஞ்சையையுடையவனுய் நிரகாண்ட சமர்த்தியையுடையவன் அதனையொருங்கே பெறுவதற்கதிகாரி யென்பதையும் ஒருகாண்டத்திலும் அதிகாரமில்லாத தன்னுட அத்தியந்ததீனத்துவத்தையும் விவேகித்து அசக்தனுய் சருவ கூகசர்வசக்தனைசர்வேஸ்வரனேநோக்கி முறையிட்டு சம்ரகூக ஸ்வீகாரபூர்வகமாக தன்னுடஆத்மாவைச் சமர்ப்பணம்பண்ணி சுசக்தியிழந்து சதாபரமதயாளத்துக் கெதிர்பார்த்திருப்பவன்.

சருவரகூகம்.— சருவவியாபக சம்பூரணனன சருவேஸ் வரன் சர்வதேச சர்வகால சர்வநாம சர்வரூப சர்வாவஸ்தைகளி லும் தத்தங்கருமபலப்பிரத நீதசாந்திய சமுதாயசாரூப மாகநின்று சர்வாத்மரகூகி பண்ணப்படுவது.

சம்ரகூகம்.— அபாரகருணையினல் தெய்வீக மனுஷீகரூப மாகசந்திபண்ணிக்கொண்டு சதா ஆசிரதவரவுபார்த்திருக்கின்ற வாசுதேவகுருப்பிர்மம்.

சரணகதி.

பிதாமுதற் பிதாவினுக்கெல்லாம் பிதாவான ஸ்ரீபரமபிதா வாகியும் புருஷன் முதற் புருஷனுக்கெல்லாம் புருஷனன ஸ்ரீ பரமபுருஷனுகியும் குருமுதற் குருவினுக்கெல்லாம் குருவான ஸ்ரீபரமகுருவாகியும் சுயாதிபத்திய சாஸ்வத சுயம்புவாயுமிருந் ன்ற ஸ்ரீபகவான் வாசுதேவசற்குருவினடிக்கமலங்களில் பிதிர் மாதுர் புத்திர களத்திர பௌத்திர பிதாமக தாசதாச ஆசிரத வாசிரயஆசரிய வாசாரியர் முதலிய பூருவோத்தர சமூகங்களோடு தனுகரணபுவனபோகாதி ஜகசிவபரசுகிதமாய் தன்னுட ஆத் மாவைச் சமர்ப்பித்து இதராந்தரவர்ச்சிதனைய் சுசக்திஇழந்து கிடப்பது.

ஸ்ரீராஜராஜேஸ்வர கிருஷ்ணைய குருப்பிர்மணேகம:

ஹரி. ஓம்.

ஸ்ரீ பரமசற்குருவேநமः

சதுர்த்தம்...மீமாம்சவிதாயகம்.

மீமாம்சம்.

சகலவேதார்த்தங்களையும் யெடுத்து இனம்இனமாகச்சேர்த்து அத்தியாயவிம்சதிரூபமாகத்தொகுத்து அதனையர்த்தபேதத்தால் பூருவோத்தரமென்றிருவகையாகப்பிரித்து அதிகாரபேதத்தால் கர்மகாண்டம் தேவதாகாண்டம் ஞானகாண்டமென்னத் திரிவித ரூபமாக நிரூபிக்கப்படுவது. பூருவமீமாம்சம்.—அத்தியாயதுவாதசை சமினி சூத்திரத்திற்குச் சபரனென்பவனற் பாஷியம்பண்ணைப் பட்டு அந்தச்சாபரபாஷியத்தைதபனுசரித்துச்செய்யும் பாட்டப் பிரபாகரமென்னும் மதத்துவயரூபமாக கர்மமேபிர்மமெனச் சாதிக்கப்படுவது. உத்தரமீமாம்சம்.—அத்தியாயாஷ்டக வியாச சூத்திரத்தில் அத்தியாயசதுஷ்டயம் தேவதாகாண்டமாயும் அந்தத்தேவதாகாண்டத்துக்குப்பலபத்திரனென்னும் ஓராசாரிய னல் பாஷியம்பண்ணைப்பட்டும் அத்தியாயசதுஷ்டயம் ஞான காண்டமாயும் அதற்கு சாங்கர மாத்துவ ரீலகண்ட. ராமானுஜர் முதலிய ஆசாரியர்களால் பாஷியம் பண்ணைப்பட்டும் இவ்விரு வகையாலும் அவாங்மனோகோசரமாய்விளங்கிய பரப்பிர்மதத் துவத்தை நிரூபிக்கப்படுவது.

கருமகாண்டம்.-வேதமானது பிர்ம சூத்திரியவைஷ்யரென் னும் வர்னத்திரயரிஷிகளை அதிகாரியாக்கி நித்திய நைமித் திய காமிய நிஷேத பிராயச்சித்தமென்றுரைத்துபேதமான கர் மத்தை விதிபூர்வகமாய்ச்சாதிப்பவர்க்கு அதன்பிரயோஜனமான சுவர்க்கபோகத்தைதக் கொடுக்கப்படுவது.--ஸ்ரான சந்தியாவந்தன ஜப ஹோம தேவதற்பண வைச்வதேவ அதிதிசத்கார அக்கி னிஷ்டோம சுவப்பசுபந்த திரோதாக்கினியாதிகர்மம்: நித்தியம்.— அயனம் விசு சங்கராந்தி புஷ்கல பஞ்சப்பருவ அர்த்தோதய மதோதய ஸ்ரான தானாதிகர்மம்: நைமித்தியம்.— அபுத்ர ராஜ சூய பெளண்டரீகாதியெக்ஞ சோமவாரவிரதாதிகர்மம்: காமி

யம்.— சுவர்ணஸ்தேய சுராபான குருதல்பகமனநி அதிபாதக மகாபாதக உபபாதகாதிகர்மம்: நிஷேதம்.— அனசன பாரசாந் தராயண கிரிச்சர ஜலமர்ச்சன வாயுவுபசூஷண அக்கினிஸ்பரிச ஆலபப்பிரகாச தீர்த்தயாத்திராதிகர்மம்: பிராயச்சித்தம். கர்மப் பிரயோஜனம்.— நிஷேதகர்மத்தைதநிவர்த்திக்கில் இடையிடையே வருகின்ற காயிகசம்பந்தமான அபமிருத்துநீங்கும்.—பிராயச்சித் தத்தைச்சாதிக்கில் சஞ்சிதகர்மம் வர்ச்சிக்கும்.—நித்திய நைமித் தியத்தை சரீராந்தபரியந்தஞ்சாதிக்கில் பிராரத்வகர்மம் வர்ச்சிக் கும்.— காமியகர்மத்தைச்சாதிக்கில் சார்வகால நிரவதிக சுக தோஷ சுகானுபவரூப சுவர்க்கப்பிராப்திணையக்கொடுக்கும்.

தேவதாகாண்டம்.— பக்தஜனங்களை அதிகாரியாக்கிபர விடுக விவ அந்தரியாமிஅர்ச்சாவதாரமென்றறிந்துபேதமாகவினாங்கிய ஈஸ்வரசொரூபத்தையாசிரயிப்பித்து சாலோக சாமீப சாரூப சாயு ச்சிய முத்திசதுஷ்டயரூபமாக நித்தியசிவனைக்கொடுத்து நித்திய பூமியிற்சேர்ப்பித்து நித்தியசூரிகளோடுமிருந்து நித்தியகைங்கரி யம்பண்ணச்செய்வது. அவற்றுள். ஈஸ்வரன். — அகிலஹேயப் பிரத்தியனீகன் அனந்தன் ஞானனந்தைகசொரூபன் ஞானசக்தி யாதி கல்யாணகுணகணவிபூஷிதன் சருவசிருஷ்டி சருவஸ்திதி சருவசம்மாரகர்த்தா ஆர்த்தோசிக்ஞாசு அர்த்தார்த்தி சுக்ஞானி யென்குகிற சதுர்விதபுருஷர்களுக்கும் ஆதிரயணீயன் தர்மார்த்த காம மோகூஷாயிக்க பலப்பிரதன் சர்வாத்மப்பிரபு ஸ்ரீமான் சர் வேஸ்வரபரப்பிர்மம்.

ஞானகாண்டம்.— நிருபாதிகமாயும் நிர்விசேஷபமாயும் நிரா வரணமாயுமிருக்கின்ற நிர்மலஞானத்தை ஸ்ரீசற்குருகடாக்ஷத் தாற்பெற்று சர்வபந்தவிசர்ச்சனராய் அத்துவித நிராய்த விசிஷ்ட சுபாவ சமர்த்தியென்னும் சம்பூரணலீலயிருல்விக்ர யாடப்படுவது.

ஸ்ரீராஜராஜேஸ்வர கிருஷ்ணய குருப்பிர்மனோதம:

ஹரி: ஓம்.

ஸ்ரீ பரமசற்குருவேநமः

பஞ்சமம்...வைசேடிகவித்தாயகம்.

வைசேடிகம்.

தத்துவநிரூபணஞ்செய்தற்பொருட்டு பரம பண்டிதரான மகத்துக்கள் வாதப்பிரதிவாதரூபத்தால் பிரமாணாதிகமாய் விஸ்தரித்திருக்கின்ற நியாயசாஸ்திரம் அவிற்பன்னளான அஸ்மதாதிகளுக்குப்போதமாம்படி மிகவுஞ்சாலுபமாய் ஒருபிரகாரஞ்சங்கிரகித்து இவ்விடத்தில் வைசேடிகம் நையாயிகமென்றிரண்டு வித்தாயகமாக யேற்படுத்தி சத்தபதார்த்த சோடசபதார்த்தரூபமாய் நிரூபிக்கப்படுவது.

சத்தபதார்த்தம்.—திரவிய குண கர்ம சாமான்ய விசேஷ சமவாய அபாவ சப்தபதார்த்தராம். தத்திரதிரவியாணி.— பிருதிவ அப்பு தேயுவு வாயுவு ஆகாயம் காலம் திக்கு ஆத்மா மனம் நவைவா.—ரூப ரச கந்த ஸ்பரிச சங்கியா பரிமாண பிரதக்துவ சம்யோக விபாக பரத்துவாபரத்துவ குருத்துவ திரவத்துவ சிநேக சத்த புத்தி சுக துக்க இச்சாத் துவேஷ பிரயத்தன தர்மாதர்ம சமஸ்காரா சதுர்விம்சதிர் குணः— உபேக்ஷணை அவுபேக்ஷணை ஆகுஞ்சனப் பிரசாரண கமனானிः பஞ்சகர்மாணி.—பரம் அபரம் துவித்தம்: சாமான்யம்.— விசேஷம்: அனந்தமேவ.— சமவாயஸ்து: ஏகமேவ. அபாவம்சதுர்விதம்.— பிராகபாவம் பிரத்வம்சாபாவம் அன்னியோன்னியாபாவம் அத்தியந்தாபாவம் இதி:

தத்திரகந்தவதுः பிருதிவி.—அதுநித்தியம் அநித்தியமென த்துவிதம் நித்தியம்பரமாணுரூபம் அநித்தியம்காரியரூபம் புனர்த்திரிவிதம் சரீரேந்திரியவிஷயபேதம் சரீரம் அஸ்மதாதிநாம் இந்திரியம் கந்தக்கிராகியம் கந்தம் நாசாக்கிரவிருத்தி விஷயம் பிருதுபாஷாணதி.— தஸ்பரிசவதுஅப்பு அதுநித்தியம் அநித்தியமென த்துவிதம் நித்தியம் பரமாணுரூபம் அநித்தியம் காரியரூபம் புனர்த்திரிவிதம் சரீரேந்திரவிஷயபேதம் சரீரம் வருணை

லோகே இந்திரியம் ரசனக்கிராகியம் ரசனம் சிகுவாக்கிரவிருத்தி விஷயம் சரிதுசழுத்திராதி.— உஷ்ணஸ்பரிசவதுதேயுவு அதுநித்தியம் அநித்தியமெனத்துவிதம் நித்தியம் பரமாணுரூபம் அநித்தியம் காரியரூபம் புனர்த்திரிவிதம் சரீரேந்திரியவிஷயபேதம் சரீரம் ஆதித்தியலோகே இந்திரியம் ரூபக்கிராகியம் சகூஷ்ணைகாராக்கிரவிருத்தி விஷயம்சதுர்விதம். பௌமம் திவ்விய ஔதரிய ஆகரசபேதம். பௌமம்: வன்னியாதி. திவ்வியம்: அபிந்தன விதியுதாதி. புக்தஷ்யபரிணமயேது: ஔதரியம். ஆகரசம்: சுவாதி.— ரூபரகிதஸ்பரிசவான்வாயுவு அதுநித்தியம் அநித்தியமெனத்துவிதம் நித்தியம் பரமாணுரூபம் அநித்தியம் காரியரூபம் புனர்த்திரிவிதம் சரீரேந்திரியவிஷயபேதம் சரீரம் வாயுலோகே இந்திரியம் ஸ்பரிசக்கிராகியம் துவக்கு சர்வசரீரவிருத்தி விஷயம் விருக்ஷாதி கம்பனயேது. சரீராந்தசஞ்சாரிவாயுவு. பிராணன்.— அதுயேகம் உபாதிபேதாது பிராணபாணதிசமிக்ரநாம்னடயே.— சத்தகுணகம்: ஆகாயம் அதுயேகம் விடுநித்தியம்.— அதிகாதி விவகாரயேது: காலம் அதுயேகம் விடுநித்தியம்.—பிராக்சியாதி விவகாரயேது: திக்கு அதுயேகம் விடுநித்தியம்.— ஞானதிகரணம்: ஆத்மா அதுபரமாத்மாசிவாத்மாவென்னத்திவிதம். தத்திரய ஈஸ்வரசருவக்ஞம்: பரமாத்மா ஏகயேவ. சிவஸ்துபிரதிசரீரமின்னம்விடுநித்தியம்.-சுகாதியுபலப்தி சாதனேந்திரியம்: மனம் அதுபிரதியாத்மநியதத்துவாது அனந்தம் பரமாணுரூபம்நித்தியம்.

சகூஷர்மாத்திரக்கிராகியோகுணம் ரூபம் அது சுக்லநீலபீத ரக்த அரித கபிச சித்திரபேதசத்தவிதம். பிருதிவி ஜலதேஜோவிருத்தி. தத்திரப்பிருதிவியாம்: சத்தவிதம். அபாஸ்வரசுக்லம்: ஜலே. பாஸ்வரசுக்லம்: தேயசு.— ரசனக்கிராகியோகுணம் ரசம் அது மதுர ஆமல லவண கடு கஷாய நித்தபேதசட்விதம். பிருதிவு ஜலவிருத்தி. தத்திரப்பிருதிவியாம்: சட்விதம். ஜலேமதுர யேவ.—கிராணக்கிராகியோகுணம்கந்தம் அதுசுராபிரசுரபியெனத்துவிதம். பிருதிவுமாத்திரவிருத்தி.— துவக்கிந்திரியமாத்திரக்கிராகியோகுணம்பரிசம் அதுசீதம் உஷ்ணம் அநுஷ்ணசீதமெனத்திரிவிதம். பிருதிவு அப்புதேஜோவாயுவிருத்தி. தத்திரசிதம்: ஜலே. உஷ்ணம்: தேயசு. அநுஷ்ணசீதம்: பிருதிவு

வாயுவு. ரூபாதிசதுஷ்டயம் பிருதிவியாம்பாகஜம் அநித்தியம் அன்னியத்தரா அபாகஜம். நித்தியவநித்தியம் நித்தியகதம் நித்தியம் அநித்தியகதம் அநித்தியம்.— ஏகாதிவிகாரயேதுசங்கியாநவத்தரவியவிருத்தி. ஏகத்துவாதி பராத்தபரியந்தம் ஏகத்துவம் நித்தியகதம் நித்தியம் அநித்தியகதம் அநித்தியம் துவித்துவாதிகம் சருவத்தரா அநித்தியம்.— மானவிவகாரகாரணம்பரிமாணம் நவத்தரவிபவிருத்தி. அது அணு மகது தீர்க்கம் இரஸ்வமெனச் சதுர்விதம்.— பிரதக்குவவிவகாரயேதுபிரதக்துவம். சருவத்திர விபவிருத்தி.—சம்யுக்தவிவகாரயேதுசம்யோகம். சருவத்திரவிய விருத்தி.—சம்யோகராசகாருணம்விபாகம். சருவத்திரவியவிருத்தி.—பர அபர விவகார சாதாரண காரணம்: பரத்துவாபரத்துவம். அதுதிக்கிருதம் காலகிருதமெனத்துவிதம். தூரஸ்தேதிக்கிருதம்: பரத்துவம். சமீபஸ்தேதிக்கிருதம்: அபரத்துவம். ஜ்ஞஷ்டேகாலகிருதம்:பரத்துவம்.கனிஷ்டேகாலகிருதம்:அபரத்துவம்.-பதனதிகாரணம்: குருத்துவம். பிருதிவ்யுலவிருத்தி.-சத்தனுதி காரணம்:திரவத்துவம். பிருதிவ்யுலஸ்தேஜாவிருத்தி. அதுசாம்சித்திகம்ணைமித்திகமெனத்துவிதம். சாம்சித்திகம்:ஜலே. நைமித்திகம் பிருதிவ்யுதேயஸ்ரு அக்கினிசம்யோகயிருதாதிதிரவத்துவம் பிருதிவ். தேயஸ்ரு: சுவர்ணதிகள்.—குரணதிபிண்டிடபாவஹேதுகுணம் சிநேகம். ஜலமாத்திரவிருத்தி.—சுரோராத்திரக்கிராகியாகுணம்சத்தம். ஆகாயமாத்திரவிருத்தி. அதுதொன்யாத்மகம் வர்ணத்மகமெனத்துவிதம் தொன்யாத்மகம்: டோரியாதிகள். வர்ணத்மகம்: சமஸ்கிருதபாஷாதிரூபம்.— சருவவிவகாரஹேதுக்ஞானம் புத்தி அதுஸ்மிருதி அனுபவமெனத்துவிதம். சமஸ்காரமாத்திரஜன்யக்ஞானம்: ஸ்மிருதி.— தற்பின்னக்ஞானம்: அனுபவம்.சருவேஷ்டம் அனுகூலதயாவேதநீயம்: சுகம்.—பிரதிகூலதயாவேதநீயம்: துக்கம்.—இச்சா: காமம். குரோதே: துவேஷம்.—கிருதி: பிரயத்தனம்.-விதிதகர்மஜன்யோ: தர்மம்.-நிஷித்தகர்மஜன்யோ: அதர்மம்.—புத்தியாதிஅஷ்டகுண ஆத்துமாமாத்திரகுணம் புத்தி இச்சாப்பிரயத்தனம் நித்தியம் அநித்தியம் நித்தியம்ஈஸ்வரஸ்யஅநித்தியம்சிவஸ்ய. சமஸ்காரம்நிரிவிதம்.— வேகோபாவனஸ்திதஸ்தாபகம். வேகம்.- பிருதிவியாதிசதுஷ்டயம் மனோவிருத்தி. அணுபவ

ரூப்பம்பிரதிபேதம்: பாவனம் ஆத்மா மாத்திரவிருத்தி.-அன்னி
பதார்தஸ்ய புனதா தவ்வஸ்ததயாபாதகம்: ஸ்திதஸ்தாபகம்
கடாதிபிருதிவுமாத்திரவிருத்தி.

சலனத்மகம்கர்மம்.— ஊர்த்துவதேச சம்யோகதேபது: உத்
உக்ஷேபணம்.— அதோதேசசம்யோகதேபது: அவக்ஷேபணம்.—
சாரஜன்னிகிருஷ்டதேபது: ஆகுஞ்சனம்.— விப்பிரகிருஷ்டதே
யோகதேபது: பிரசாரணம்.— அன்னியது: சருவங்கமனம். நித்
தியம்யேகம்.— அநேகாஸ்ரிதம்: சாமான்யம்.— பரம்: சத்தா.
அபரம்: திரவியத்துவாதி.-நித்தியத்திரவியவிருத்தயோவியாவர்த்
தகம்: விசேஷம். அதுஅனந்தபேவ.— நித்தியசம்பந்தம் சம
வாயம். அது அயுதசித்தவிருத்தி யயோர்மத்தியே ரகம் அவி
நஸ்பதவஸ்தம் அபராசிருதம் எவாதிஷ்டதே. அயுதசித்தி.—
அவயவாவயவிநெள குணகுணிநெள கிரியாகிரியவான்தன சாதி
விபக்தி விசேஷம்நித்தியத்திரவியபே.—பிராகபாவம்: உற்பத்தி
ரூபம்.—பிரத்தாம்சாபாவம்:உற்பதேதவனாந்தரம். — அன்னி
யோன்னியாபாவம்: யதாபடம்கடோநபவதி.— அத்தியந்தாபா
வம்: யதாபூதலே கடோநாஸ்தி.

சருவேஷாம் அபிபதார்த்தாணுமுக்தேனெள வாக்ர்ப்பா
வாது சப்தைவபதார்த்தம் இதுசித்தம்.

ஸ்ரீராஜராஜேஸ்வர சிருஷ்ணைய குருப்பிரிம்மேனை நம:



ஓ

ஹரி: ஓம்.

ஸ்ரீபரமசற்குருவேநம:

சட்கம்...ணையாயிகவிதாபகம்.

ணையாயிகம்.

பிரமாண பிரமேய சம்சய பிரயோஜன திருஷ்டாந்த சித்
தாந்த அவயவ தற்க நிண்ணைய வாத செல்ப்ப விதண்டா ஏத்வாபா
பாச சல சாதி நிக்கிரகஸ்தான சோடசபதார்த்தநிருபிதம்.

பிரமாணம்.— பிரத்தியக்ஷ அனுமான உபமான சாப்த
சதுஷ்டயபேதமாய் சருவஜகத்காரணகார்த்தா ஒன்றுண்டென்று

நிச்சிதப்படுத்துவது. பிரமேயம்.— ஞானத்துக்குவிஷயமாக சரீ
ரேந்திரியார்த்த மனோ புத்தி ஆத்ம பிரவர்த்த நிவர்த்த பாவ
அபாவ பந்தமோக்ஷ பரிச்சின்ன துவாதசத்தைக்கண்டு அப்பிர
மேய அபரிச்சின்னசொரூபமாக விளங்குவது. சம்சயம்.— சற்
குருவினது வாக்கியோபதேசத்தை நிஷ்டாபூர்வகமாகச்சாதித்து
நம்பிக்கைபிறவாமல் சந்தேகபடுத்தியா லிதுவதுவென்னக் கலக்க
மூற்றுழல்வது. பிரயோஜனம்.— இந்திரியசட்க இந்திரியவிஷய
இந்திரியக்ஞான சுக துக்க சரீரமென்னும் இருபத்தொருபத
மான துக்கநிவர்த்திரூபமோக்ஷம். திருஷ்டாந்தம்.— பருவதவன்
னிக்கு மகாநசாதியைப்போல சர்வஜகத்காரணைகர்த்தாவுண்டென்
பதற்கு ஒருசரீரேந்திரியகாரண ஆத்மாவை யுதாகரணப்படுத்
துவது. சித்தாந்தம்.— விவிதவாதிகளினது பரபக்ஷத்தைப்பூரு
வப்படுத்தி பரமேஸ்வரனேபரதத்துவமென்கின்ற தமதுசித்த
பக்ஷத்தைநிரூபிக்கப்படுவது. அவயவம்.— பிரதிக்ஞை ஹேது
உதாகரணம் உபநயம் நிகமனமென்னப்பஞ்சவிதம்.- பருவதவன்
னியைப்போல பரமாத்மாவொன்றுண்டென்பது: பிரதிக்ஞை.—
பிரபஞ்சதாமமே: ஹேது.— மகாநசாதியைப்போல ஒருசரீரேந்
திரியகாரணஆத்மாவே: உதாகரணம்.— இத்தைதப்போல சரூவ
ஜகத்காரணபரமாத்மா விருக்கின்றானென்றறுத்துக்காட்டுவது:
உபநயம்.— நிச்சயித்தேதகமாகத் தெளிந்திருக்கின்ற பரமாத்மக்
ஞானமே: நிகமனம். தற்கம்.— நிரீஸ்வரவாதத்தை அனுசரித்து
சதாசகேஸ்வரவாதத்தைப் பிரயோகம்பண்ணுவது. நிர்ணை
யம்.— பய பக்தி விஸ்வாசத்திறல் அன்புருவான துவளர்ந்து பரம
சுகிர்தம்விளைப்படுமிடத்துபரமார்த்தநிச்சிதம் பண்ணப்படுவது:
வாதம்.— ஆசிரயபரஸ்பரகார்த்தம் பரஜயபேக்ஷைப்பிரயோகம்பண்
ணுவது. சல்ப்பம்.— சுபக்ஷத்தையாதரிக்காமல் பராஜுடைய
தோஷத்தை உத்காடனம்பண்ணுவது. விதண்டா.— நியாய
விரோதினது குதற்கவாதத்தைநிராகரித்துப் பலத்காரமாக
சுபக்ஷத்தைஸ்தாபனம்பண்ணுவது.

ஏதுவாபாசம்.— சவ்வியபிசாரம் விருத்தம் சத்பிரதிபக்ஷம்
அசுத்தம் பாதிதமென்னப் பஞ்சவிதம் ஆபாசமாயது. சவ்வியபி
சாரம்.—பரஸ்துரைச்சாதிக்குமிடத்து அதற்குரிய சத்தாதிமுக்

கியலகூனத்தை எடுத்துக்காட்டாமல் சுக்கிலநீலாதி கௌண லகூனத்தை யுதாகரித்துக்காட்டும் அதேகாந்திகளது. விருத் தம்.— காரியரூபப்பிரபஞ்சத்தைப்போலக் காரணரூபபரமாத்மா த்தியனென்னைச்சாதிக்கின்ற அபாவதேயது. சத்பிரதிபக்ஷம்.— காரியரூபப்பிரபஞ்சத்தில் காரணரூபபரமாத்ம சத்தாதிலக்ஷ ணம் எடுத்துச்சாதிக்க காரியரூபமான பிரபஞ்சத்திற்குரிய அநுவ் தாதிலக்ஷணம் காரணரூபரமாத்மாவுக் குண்டென்றுசாதிக்கும் வெதிருக்கதேயது. அசுத்தம்.— ஆசிரய சொரூப வியாப்பியத்தை மாறுபடச்சாதிக்கின்ற குதற்கதேயது. ஆசிரயாசுத்தம்.— சொப் பிரயோஜன தற்புகழ்ச்சியைக் குறித்துழல்கின்ற பாஷண்டசுதர் தரர்களை பரசமர்த்திதை பரமகாருண்ய பரமரக்ஷகனென்று ஆசிர யிக்கின்ற அவிவேகதேயது. சொரூபாசுத்தம்.— சருவசங்கபரித் தியாகியாய் சருவமும்அநித்தியமெனக்கண்டு விவிதவிஷயத்துவ் குப்பயந்து வெருண்டோடிக்குவிந்துகிடக்கின்ற அதிவிரக்தனை நிச்சங்கதுறவிபை அவாப்தசமஸ்தகாம ஆசிரதரதிக குணாசம் பூரண ஸ்ரீமான்சற்குருவென்று சாதிக்கின்ற பாகாசதேயது. வியாப் பியத்துவாசுத்தம்.— காரியரூபப்பிரபஞ்ச வியாபகமில்லாவிடத் துக் காரணரூபரமாத்மாவுக்கு அபாவஞ்சாதிக்கின்ற அக்ஞான யேது. பாதிதம்.— சற்குணசம்பன்னனை புருஷோத்தமனிடத் தில் விரோதபொருமையால் அசற்குண அபாசுத்தனென்னைச் சாதிக்கில் ததபாவசற்குணத்தைப் புத்திபூர்வகமாக விதேய பூரணனுலறியப்படுவது.

சலம்.— இதரபதார்த்தத்தைப் பிரகடனம்பண்ணி அபி மதபதார்த்தத்தைத் தோஷமாகஉத்காடனம்பண்ணுவது. ரூதி.— வக்தாவினது அபிமதத்தையறியாமல் பிரதிபுத்தரருத்சொல்லப் படுவது. நிக்கிரகஸ்தானம்.— காலதேச பாத்திரசுகாபாதிகனோப் பரீக்ஷிக்காமல் அவிவேகவாதத்தைப்பண்ணி அதனால்தாழ்த்தப் பட்டிருக்கின்ற சுவாஅவமானம்.

ஸ்ரீராஜராஜேஸ்வர கிருஷ்ணய குருப்பிர்மதேணரடம:

ஹரி: ஓம்.

ஸ்ரீபரமசற்குருவேநமம:

சத்தமம்...யோகவிதாயகம்.

யோகம்.

சித்தவிருத்திநிரோதனம் அதுபலப்பிராப்தியிலொன்றுகி யும் நிஷ்டாபேதத்தாற் சாலம்ப நிராலம்ப சாங்கிய சாங்கமென் னப் பலவாறுயும்விதிக்கப்படுவது. அவற்றுள்.— சாலம்பயோகம்.- சகேஸ்வரசொரூபத்தையவலம்பித்து சத்தாதிவிஷயங்களிற்செல் லாமல் சித்தவியாபாரத்தைத் தடைசெய்யப்படுவது. நிராலம்ப யோகம்.— விவிதவிஷயங்களிற்செல்லாதபடிக்கி விருத்திநிரோ தனமாக்கிய சித்தத்தை வேறொருவஸ்துவை அவலம்பிக்காமல் விமலாகாரமாய்த் தெளியச்செய்வது. சாங்கியயோகம்.— பிர கிருதிபுருஷவிவேக மைத்திரியாதிகுணவிசிஷ்டரைய் அவித்தை யாஸ்மித ராகத்துவேஷ அபினிவேஷாதி பஞ்சக்கிலேசம்வர்ச் சித்து நான்அசங்கன் சின்மாத்திரனென்னும் தீர்க்கதிடவிரதத் தாற்சாதிக்கப்படுவது.

சாங்கயோகம்.— இயம நியம ஆசனப் பிராணயாம பிரத்தி யாகார தாரணை தியான சமாதியென்னும் அஷ்டபேதமாய்ச் சாதிக்கப்படுவது. அவற்றுள்.— அஹிம்சா சத்திய அஸ்தேய பிர்மசரிய கருணை அவஞ்சக க்ஷமை தைரிய ஆகாரசௌசாதியே: இயமம்.— தப சந்தோஷ யதார்த்த தான பூசா சிரவண லஜ்ஜா மதி ஜெப விரதாதியே: நியமம்.— சௌஸ்திக கோமுக பத்ம வீர சிம்ம பத்திர முக்தா மயூர சுகாதியே: ஆசனம்.— பிர்மசா சூத்காராரார்த்தம் நாடிகளினது உற்பவ சிரோஷ்ட ஸ்தான மார் க்க சோதனை சுத்தியால் பிராணனைநிர்க்கம்பண்ணிக்கொள்வது: பிராணயாமம்.—நாபிமூலத்திலுற்பவித்து அதோஹூர்த்துவப்பிர தேசங்களிற் சக்கராகிருதியாகவலைந்து வாயுவுசஞ்சாரயோக்கிய தையாய் எழுபத்திராயிரம் நாடிகளாகப்பிரிந்து சருவாவஸ்தை யிலும் பரவிநிற்பது: நாடியுற்பவம்.— சங்கினி குரு காந்தாரி

அல்பபுஷோ புருஷ அத்தி சிங்குவா வாம பிங்கலா சுழிமுனை: நாடி-
சிரோஷ்டம்.-மூல மூர்த்தன்ய நாபி கண்ட ரசன நேத்ர சுரோத்
திர நாசிகையே: நாடிஸ்தானம்.—ஐக்கியபிர்மீக தூமாதி அர்ச்ச
ராதியே: நாடிமார்க்கம்.—முக்கியன் வைரம்பன் மகாப்பிராணன்
அந்தரியாமியென்கின்ற சிரோஷ்டநாடிகளைவிவேகித்து நாடிமத்
தியகதனை பரமாத்மதேவையுணரப்படுவது: நாடிசாதனை.—
சோசகபூரக மிசிரகும்பக சாதனையாற் பிராணவாயுவைஸ்தம்பித்து
கேவலங்கும்பகமாத்திரமாயிருப்பது:நாடிசுத்தி. - இந்திரியங்களை
சத்தாதிவிஷயமார்க்கத்திற்செல்லாது நிக்கிரகிப்பதே: பிரத்தியா
காரம்.-சித்தவியாபாரத்தைத்தவிர்த்து நிவாததீபம்போல லக்ஷ்மி
யத்தில் அசஞ்சல சித்தையிருப்பது:தாரணை.— ஆதார ஆதேய
விவேகியாய் மூலாதார சுவாதிஷ்டான மணிபூரக அநாகத விசுத்தி
ஆக்ஞா சடாதாரங்களையுணர்ந்து அதற்குரியபிதய்வதங்களை அர்ச்
சிப்பதே: தியானம்.— அக்கினிபீஜாக்ஷரத்தால் மூலாக்கினியை
யெழுப்பி நாடிவலயங்களைப்பேதித்து ஆதாராந்த சிரோமத்திய
கத சகஸ்திரதளகமல கேசராக்கிர ஆதேய சந்திராமிர்தத்தில்
படிந்திருப்பது: சமாதி.

ஸ்ரீராஜராஜேஸ்வர கிருஷ்ணய குருப்பிர்மணேநம:

ஓ

ஹரி: ஓம்

ஸ்ரீபரமசற்குருவேநம:

அஷ்டமம்...வைஷ்ணவஸ்திராயகம்.

வைஷ்ணவம்.

இரண்யகற்பவிராமானுஜீய தத்துவவாத சங்கராசாரிய யாதவ
மாயாவாதமென்கின்ற சட்சமயநிரூபிதமாயும் சகலவேதவேதாந்
தப்பொருளாயும் நாரங்கள்தோரும் வீற்றிருக்கின்ற சர்வாதாரக்
கடவுளாயும் அவாங்மனேகோசரமாயுமிருக்கின்ற ஸ்ரீமன் நார
யணபரப்பிர்மத்தை பாஞ்சராத்திர வைகானசமென்னும் ஆகமத்
தையனுசரித்து அந்தநாராயணபரப்பிர்மமே விஷ்ணுவேதவாகவும்
அந்தவிஷ்ணுவேதவே பரதத்துவமாகவும் நிரூபிக்கப்படுவது.

இரண்யகற்பவைஷ்ணவம்.—ஓரதிகாரி சர்வலோகங்களையும் அடைதற்கேதுவாய சாதனங்களை கிரியாபூமியிற்சாதித்து அதனது சாத்தியமான புவனபோகங்களைக் கிரமங்கிரமமாகவனுபவித்துப் புவன அத்துவாவிதிப்படி சத்தியலோகத்தையடைந்து கற்போதய பிரளயகற்பவாசியாய் சொரூபத்திற்கு ஆனிவராமல் பிர்மாவினல் ரக்ஷிக்கப்பட்டுப் பிரளயாந்தத்தில் பிர்மாவினேடு மகாவைகுந்தஞ்சேர்ந்து சருவசிரேஷ்டனுகிய ஈஸ்வரனுக்குத் ததானுரூபமாகத் தாசபூதக்கிரிகையைச் செய்துகொண்டிருப்பதே முத்தியென்பது.

இராமானுஜீயவைஷ்ணவம்.—அத்துவேஷி அனுகூலி மந்திரபாடி நாமதாரி சக்கரதாரி வைஷ்ணவன் ஸ்ரீவைஷ்ணவன் பிரபன்னன் ஏகாந்திபரமயேகாந்தியென்னும் பத்துப்பருவமுடைய அதிகாரிகளாய் பிரவர்த்தி நிவர்த்தியென்னும் நிஷ்டாபேதத்தாற் றுவிதமாயும் பலப்பிராப்தியிலேகமாயும் அத்துவித தொய்த சம்பந்தமான விசிஷ்டாத்துவிதபக்ஷத்தை நிரூபிக்கப்படுவது. அவற்றுள்.—பகவத்பாகவதவிஷயங்களில்த் துவேஷமில்லாமலிருப்பவன்: அத்துவேஷி.—பகவத்பாகவத விஷயங்களுக்கு வேண்டும் உபகரணசாதக சகாயபூதையாயிருப்பவன்: அனுகூலி.—அற்பணுதிகளைப்பண்ணுமல் இச்சாரூபமாக மந்திரசூழகங்களை யுச்சரிப்பவன்: மந்திரபாடி.—திருமண் சோபி சந்தனமுதலிய ஊர்த்துவபுண்டரத்தால் வைஷ்ணவசின்னத்தை வெளிப்படையாக யாவருக்குந்தோற்றும்படி. பாகியரூபத்திற்றரித்துக்காட்டுபவன்: நாமதாரி.—சந்தன தப்த புஷ்பாதிகளால் சக்காராங்கிதம் பண்ணிக்கொண்டு சிரோஷ்டமந்திரங்களைச் செபிக்கப்படுபவன்: சக்கரதாரி.—ஸ்ரீவிஷ்ணுசம்பந்தம்பெற்று நிவர்த்திபிரவர்த்திவிதிகளை நிஷ்டாபூர்வகமாகச் சாதிக்கப்படுபவன்: வைஷ்ணவன்.—வேதபாரகனுய் நிர்ப்பரத்துவ அநுசந்தானமுடன் திருமந்திரார்த்த காலசேஷபம் பண்ணிக்கொண்டிருப்பவன்: ஸ்ரீவைஷ்ணவன்.—சுதந்தரரூபமான சீவச்சேஷ்டைகளற்று பாரதந்திரனுய் பகவத்செயலாலே போஷிக்கப்படுபவன்: பிரபன்னன்.—சர்வப்பிராணிகளினிடமாக வாசுதேவையும் வாசுதேவினிடமாகச்சருவப்பிராணிகளையும் பிரிவரக்காண்பவன்: ஏகாந்தி.—சர்வமும் பகவானுடையசொரூபமாகத்

தெளிந்து நிர்ச்சிந்தனையுண்ணுதலற்றிருப்பவன்: பரமயோகாந்தி.

தத்துவவாதனைவஷ்ணவம். — அனந்தஜன்ம புண்ணியபரி பாகத்தால் விப்பிரபுருஷனுகவவதரித்து விப்பிரகர்மத்தைதச்சா தித்து விப்பிரயோகபிர்மக்ஞானநிஷ்டனுய் விப்பிரோத்தமர்களை யாராதித்து விப்பிரசிரோஷ்ட தெய்வீககுருவினல் தனக்குரிய நிசசொரூபத்தையுபதேசிக்கப்பெற்று சொரூபக்ஞான நிஷ்டா தீர்க்கத்தினல் இதராந்தரங்கள்வர்ச்சித்து அர்ச்சராதிமார்க்கவிர ஜாஸ்தானமகிமையால் அவித்தையாகட்டட்டம் உடைபட்டு அப்பி ராகிருத சதுர்ப்புஜாஸ்த தேதேஜோமயமாகிய தனதுநிசசொரூபத் தைப்பெற்று விரஜாதீரத்திலெழுந்தருளியிருக்கும் அமானவருரு வினது கரஸ்பரிசாதி சமஸ்காரபூர்வகமாக அனுமதியைப்பெற்று அப்பிராகிருத நகரத்திற் பிரவேசித்து சாலோக சாமீப சாரூப சாயுச்சிய முத்திசதுஷ்டயரூபத்தை அதிகாரானுரூபமாகவடை யப்படுவது.

சங்கராசாரியவைவஷ்ணவம். — சுத்தாத்துவித சுயம்பிரகாச யதார்த்த ஆத்மக்ஞான மோக்ஷைகவல்ய திவ்வியசாக்ஷாத்கார மாகவிளங்கும் நாராயண பரப்பிர்மமெதுவோ அதுவே நமது சொரூபமென்ன நிரூபிக்கப்படுவது.

யாதவவைவஷ்ணவம்.—சர்வாத்மப்பிரபுவாய் பரமபுருஷநிலை யைச்சாதித்து நிரோதுகடாக்ஷத்திறற்றன்னையாசிரயமானவர்கள் யாவராலும் அவர்களே அதிகாரிகளெனக்கைக்கொண்டு பரம சுகிர்த்தை அகாரணமாக அவர்களுக்கு அனுக்கிரகம்பண்ணி பரமபதவாழ்விற்சேர்க்கப்படும் வாசுதேவகுருப்பிர்மமே பரதத் துவமென்று சாதிக்கப்படுவது.

மாயாவாதவைவஷ்ணவம்.-சுத்திகாரசித கதனுரவிந்தம்போலத் தோற்றுமாத்திரமாகவிருக்கின்ற மாயாப்பிரபஞ்சத்தை மிதனை யாய்க்கண்டு நிரூபாதிகசொரூபமாய் விளங்கிய நாராயணனேபரப் பிர்மமென்று நிஷ்டாரூபமாய்ச் சாதித்து அதுவே நமதுசொரூப மென்றனுபவரூபமாயுணரப்படுவது.

நாராயணபரப்பிர்மம். — சங்கருஷணப் பிரத்தியும்ந அனி ருத்தவாசுதேவ புருஷோத்தமமென்னும் வியூகபஞ்சக கர்த்தா வாகவிருந்து சர்வரக்ஷகளையும் பண்ணப்படுவது. ருத்திர அந்

கினி அந்தகாதிகளுக் கந்தரியாமியாகநின்று பிரபஞ்சத்தைசம் ஹரிக்கை: சங்கருஷணவியூகம்.— பிர்மாவுக்கும் பிரஜாபதிகளுக் கும் அந்தரியாமியாகநின்று பிரபஞ்சசிருஷ்டிபண்ணுவது: பிரத் தியும்நாவியூகம்.— விஷ்ணுவாதி அவதாரரூபங்களுக்கு அந்தரி யாமியாகநின்று பிரபஞ்சரகைஷ பண்ணுவது: அநிருத்தவியூ கம்.—உபகார ரகூஷக சிகைஷாமோஷங்களேயேற்படுத்தி சருவாத் மாக்களுக்கும் அந்தரியாமியாகநின்று சருவரகூஷணம் பண்ணு வது: வாசுதேவவியூகம்.— அசித்தைப்பரிணமித்துச் சேதனர் களுக்குச் சரீரேந்திரியாதிகளைக்கொடுத்து ஞானவிகாசத்தைப் பண்ணுவது: உபகாரம்.— மனுவாதிமூலகேது சாஸ்திரங்களைப் பிரவர்த்திப்பித்து தத்தம்வரைகடவாது நிறுத்தி நல்வழிகாட்டிப் பயிருக்குநீர்நிலைபோலேஅனுகூலமாகப்பிரவேசித்துநின்று சருவ ரகைஷகளையும் பண்ணுவது: ரகூஷகம்.- அவிநீதனைபுத்திரனைப் பிதாவிலங்கிட்டு வைக்குமாப்போலே விஷயாந்தரங்களிலே கை வளருகிறகரணங்களைக் குலைத்திட்டுவைக்கை: சிகைஷ.— அங்குர பல்லவ பக்குவ பலமென்னும் அதிகாரதிசாபருவங்களைத்திதரிந்து ஸ்ரீசற்குருரூபமாய் வெளியிட்டு சரண்யருசியைப்பிறப்பித்து முத்திபூமியிற்சேர்த்துவைக்கை: மோகூஷம்.—மாயாவிகாரமான ரூபவரூபத்தைக்கடந்து அவாங்மனோகோசரமாயிருக்கும் நம் ஆனந்தரூபத்தைத் தெளிந்து சதா அநனிடத்து நாட்டம் வைத்திருப்பவர்களுக்குப் பவபந்தரோகத்தைநிவர்த்தித்துஅபே கூஷித்தபோகத்தைக்கொடுக்கப்படுவது: புருஷோத்தமவியூகம்.

ஸ்ரீராஜராஜேஜஸ்வர கிருஷ்ணைய குருப்பிர்மணைகம:



உ

ஹரி: ஓம்

ஸ்ரீபரமசற்குருவேகம:

நவமம்...சைவசித்தாந்தவிதாயகம்.

சைவசித்தாந்தம்.

உத்தரகுருவாய்நின்று பூருவோத்தரமென்னும் இருவகை யாகிய வேதார்த்தங்களை வெளியிட்டருளியஸ்ரீபகவான்கிகூஷணை

குருவாய்நின்று சனகாதிகளுக்குணர்த்திய சிவாகமப்பொருளை இவ்விடத்திலொருபிரகாரம் சொல்லத்தொடங்கி தசகூடோணைக் தரவிரோதிகளான பாஷண்டதுறவிகளை முதலில்த்தானே ஏழு பாசுரங்களால் நிரசித்து சைவசித்தாந்தத்தை நிரூபிக்கப்படுவது.

பாஷண்டடம்.— இல்லொழுக்கமும்விட்டு துறவொழுக்கமுங் கெட்டு பதிதராய் வேத விரத விதேய காபாலிகாதி வரம்பிலுங் கட்டுப்படாமல் மூர்க்கசிகாமணிகளாய் அசுத்தவகங்காரத்தை அபிவிர்த்திபண்ணி முடிவில் ஆசுரசம்பத்தைபடையப்படுவது.

வேதவரம்பு.—யசன யாசன அத்தியயன அத்தியாபக தான பிரதிக்கிரகமென்கின்ற சட்கர்மசம்யுக்தனை ஒருவிப்பிரனுக்கு அர்த்ததாரசங்கங்களில்விரக்தியுண்டாகி காவிகாம்பர தண்டிகமண்டலாதியை விதிபூர்வகமாகப்பெற்று பகூதக குடீசகமென்கின்ற சந்நியாசவிரதத்தைச் சரீரமுள்ளபரியந்தஞ் சாதிக்கப்படுவது.

விரதவரம்பு.—பிராம்மணாதி சண்டாளபரியந்தம் அவரவர்க்காக ஏற்பட்டிருக்கின்ற குலாசாரதர்மத்தை விட்டிடாமல் சிவாகமவிதிப்படி சரிதாதிஞானந்தமான தீக்ஷையைக் கிரமமாகப்பெற்று விபூதிருத்திராக்ஷ தாரணமுடையனாய் சைவநெறி தண்டநெறி பக்திநெறிக்கி மாறுபடாத சற்சரிதமுடையனாய் தியான ஜப யோக சமாதியிலுல் சிவசிவோகத்தைதத்தெளிந்து ஆசிரயிப்பவர்க்குப் பரம்பரையாய் சிவமேபரதத்துவமென்றறுதிக்கிரகம்பண்ணிவருவது. அவற்றுள். சைவநெறி.—பிராம்மணாதிசண்டாள பரியந்தம்அவரவர்க்காகஏற்பட்டிருக்கின்ற குலாசாரதர்மத்தையனுசரித்து சிவக்ஞானதேசிகரது திருவடிசம்பந்தம்பெற்று விதியாபாத கிரியாபாதவிதிப்படி விபூதிருத்திராக்ஷ காஷாயபஞ்சாக்ஷர பஞ்சமூத்திரா விஸ்வாசபூதிதமுடையனாய் சமையாதி அபிஷேகாந்தமான தீக்ஷையக்கிரமமாகப்பெற்று சிவசீவலக்கியத்தைதத்தெளியப்படுவது. தண்டநெறி.—வேதவிகிதமான குலாசாரதர்மத்தை விட்டு மாயாகர்ம வாதஷ்டிதராகவிருக்கின்ற பாஷண்டமூர்த்திகள் பூசித சேவித யாசக போஜன உபசாராதிகளையபேக்ஷித்து விபூதி ருத்திராக்ஷ காஷாயாதி சிவவேடத்தை சைவநெறிக்கிமாறுபாடாகத்தரித்து பிரபஞ்சத்தைமறுட்டிப்பிளைக்கின்ற பரமபாவிகளான சிவத்துரோகிகளுச்

சிகூஷிக்கப்படுவது. பக்திநெறி. — பாத்திராபாத்திரங்களைப் பரீ கூஷிக்காமல் காஷாயாதி சிவவேடத்தை தேவ மனுஷ நாக திரியக் காதி எந்தச்சீவரிடத்தில்ப் பார்த்தாலும் சுவாகங்காரத்தைதவிட்டு அவற்றைச் சிவசொரூபமாகப்பாவித்து தத்தம்விதிபூர்வகமாகப் பூசிக்கப்படுவது.

விதேயவரம்பு. — காணியாகூஷியைப்பெற்று கிராமவூழியம் ஆலயப்பணிவிடை தண்ணீர்ப்பந்தல் நந்தனைகைங்கரியம் சங்குசே கண்டிவேலை இத்தியாதிபணியை கிராமவரம்பில் கட்டுப்பட்டுச் செய்தும் சவசரீரத்தைத் தவசரீரமாயலங்கரித்து பிருதிவுசமஸ் காரவிதிப்படி சமாதியில்வைத்தும் உத்தரக்கிரிகையை நடத்தப் படுவது.

காபாலிகவரம்பு.—சிருத்திதாண்ட சீராளவடிகளைரகூஷிக்கும் பொருட்டு பிகூஷாசூழகங்களோடு பிகூஷாவேஷத்தைத்தரித்து வைரவமூர்த்தமாயெழுந்தருளிய சிவபெருமான் திருச்சித்தப்படி சித்தர்கள் பத்தர்கள் முதலானசிவகணங்கள் ஊனமெசவிடு குருடு சப்பாணி லங்கோகட்டி நிர்மாணி கௌபீணி காஷாயி தப்புக் கொட்டி சங்குஊதி மரமாட்டி மணியாட்டி பாம்பாட்டி குரங் காட்டி கல்லுளிச்சித்தன் கவுத்துச்சித்தன் அகப்பேய்ச்சித்தன் பித்தன் பேயன்சாகசங்கமன் உயிர்பிரித்தெதாடுக்குவோன்உடற் கூறுபடிப்போன் அங்கயீனன் இழிகுலன் அநுசாரன் முதலான பிகூஷாவேடத்தைத்தரித்து உதரநிமித்தியம்வெகுகிருதவேஷம் யாவனைனலும் பசியனேசாத்துக்கதிகாரியென்பதை உலகத்த வர்க்குவெளிப்படையாய்க்காட்டுவது.

பாசுரம்.—வாமபாகத்தின்வர்க்கமோரிரண்டும் வகுத்தனன் வடநிழற்பரமன், காமனதுருவைமாத்தியும்ரதிக்கிக் கருதிய தளித்து மேலறத்தைப், பூமகற்குரைத்தும் காரதர்க்கங்கோர் புகன்றனைதச்சைவர்போற்காட்டும்,பாமரத்துரோகப்பாஷண்டம் விலக்கிப் பகுத்துமேல்விரித்துரைத்திடுவாம். (க)

சொல்லிசேணன்கண்முன்னிகபரம்விடுத்துச் சுயமதாய்விளங் குவோன்றுறவி, இல்லிசேணன் கருமமியற்றுபேதத்தா லிகபர மோகூஷமேலடைவன், வல்லியோனருளால்மூன்றுமோர்கணத்

தில் மகிழ்வொடுமடைபவன்சிரோஷ்டன், புல்லியோனைசயாற்
பிதற்றுபாஷண்டப் பிரபுவாய் நரகினுக்கெழுவன். (உ)

சூரனீயொருவன்துறவிதேனின்னைச் சூள்ந்துளாரனவருந்
துறவோ, ஊருதோரிறந்துதானியதனங்களொருப்படச்சேர்ப்
பதோஷ்டை, பேருறப்பழித்துப்பின்புபல்காட்டிப் பிழைப்
பதோமகவைராகம், பாரிலிப்பெரியபாஷண்டத்துறவி பகருநா
லெதுவதைதப்பகர்வாய். (ஊ)

சங்கமன்காவியம்பரஞ்சிரமேற்சைவர்களருள்வழியடுக்கும்,
துங்கணீடணையைத்துறப்பதற்கணியும் சொற்றிடுஞ்சுத்தசை
த்தில், எங்கணுமயக்கியைம்புலன்வளர்க்க வில்லர்கட்குரியநூல்
பிதற்ற, உங்களைத்துறவென்றுணர்த்துநூலெதுவோ உறைத்நி
டும் பாஷண்டப்பெரியோய். (எ)

அறத்துவமெனக்கேதறிவுயான்செய்வ தனைத்துமேலற
மெனவரிட்டன், திரத்துவம்பேசிவித்திலுக்குரிய செயலறிகுண
மிலாழூர்க்கப், பரத்தையரிருமாந்தறத்துவம்நழுவிப் பதிதராயிக
பரமோகஷ, சிரத்தையுமிழந்தவரக்கனைச்சிவமே தினரகழுத்து
தல்திண்ணம். (ஏ)

வெழுப்பெலாம்வெண்ணீர் வேம்பெலாமிலிங்கம் வேடமுஞ்
சிவமெனப்பணிந்து, பழிப்பிலாக்கதிசேர்பத்தர்நூலொதிபகட்டு-
யூரூர்தொருமயக்கிக், கழுக்களாய்க்கோதிப்பொருளடகரிக்கும் கப
டகத்துறவினையரசன், வழுக்கிலைலொருக்கியொழுக்கநூல்விரித்துல்
வழுக்கமென்றுரைத்தனர்தெளிந்தோர். (ஐ)

இன்னபாஷண்டவிருளைச்சிதைத்த லிலகவர்க்கன்னிகா
யிருத்தல், அன்னவர்கலக்கிலறுதபித்திடுத லருள்வழியடியர்பா
லடியை, முன்னிலையாக்கியஷ்டசேவிதராய் முதற்றிலோகத்திருப்
பவர்க்குச், சொன்னதோர்நெறியையருள்நிலைதான்றுத்துயி
கற்குச்சொற்றிடலாகா. (ஒ)

சைவசித்தாந்தம்.

அவாங்மனோகோசரமாய்விளங்கியஅதீதசிவத்தைதவாமனைவரு
காளாமுக மாவிரத பாசுபத சைவமென்னும் சட்சமய நிலைநிற
மாயும் ஆகம வேத தாந்திரீக வைதீக வாதப்பிரதிவாதருபத்தால்
ஆதி அநாதி அவாந்தர அத்துவா பேதவபேத அறுத்துவ மடைந்

துவ சகள நிஷ்கள சகுண நிற்குண பர வபர சதுர்ப்பாத சுத்த சுபாவமென்னைச் சைவம் அநேகதேவதாவாத சாத்தியமாயும் நிரூபிக்கப்படுவது.

வாமம்.—நிருமாணஸ்ரீயைப்பீடமேற்றி அவளைச்சத்திரூப மாகவரித்து மதுமாம்சாதிகளாலாராதித்து ஊட்டிஉண்டுமிழ்ந்த உச்சிஷ்டசேஷங்களை சாக்தேயசங்கமத்துக்கு வினியோகம் பண்ணி கஞ்சாக்கள் அரக்கு அபின்முதலாகிய லகிரிபதார்த்தங் களைப் புசித்து ஸ்ரீபுருஷனவதேவதை வெளியாவேசநிருமாணங்கொண் ராய்ப் பராசத்தியே பரதத்துவமெனநிரூபிக்கப்படுவது. வைர வம்.—அஸ்திதாரணை காவிகாம்பர நரகபால பிசாசுடன பயங்கர வேஷமுடையவராய் ஸ்மசானபூமியிற்பிரவேசித்து குண்டமண் டலவேதிகையிட்டு வைரவசிவத்தைவரித்துக் கபாலவோட்டில் மதுமாம்சாதிகளைப்பெய்து வைரவதேவாமத்துக்காகுதிபண்ணி நர டலிகொடுத்து நரமாம்சாதி அசுத்தபோகங்களோடு பூசித்தருந் திஅதற்குரிய இஷ்டசித்தியைப்பெற்று மதாவேஷலகிரி உன்மத் தராய் அகாரணமாகத்துணங்கையிட்டுச் சிரித்துக் குதித்தானந் தித்து வைரவசிவமே பரதத்துவமெனநிரூபிக்கப்படுவது. காள ரூபம்.—ஜனன மரண ருது சாதி உச்சிஷ்டமென்னும் பஞ்சரூப விசர்ச்சனராய் அங்க லிங்க காஷாயதாரண குடும்பசகித பிசாசா டனராய் அதாரணைநின்றித ஆலய அதேசவிதராய் வீரகமனிதிப்படி குருலிங்கசங்கம பூசிதராய் வீரபத்திரசிவத்தை யாராதித்து வீர பத்திரசிவமே பரதத்துவமென நிரூபிக்கப்படுவது. மாவிரதம்.— விபூதிருத்திராக்ஷ சித்திப்பிரதகாஷாயதாரண சித்தியாகசாதி தியரான கௌமாரசிவத்தைத் பிரார்த்தனைரூபமாக வரித்து அதற்குரிய தீர்க்கவிரதத்தைச்சாதித்து அதேபக்ஷித்தசித்தியைப் பெற்றுக்கொண்டு குமாரதேவையே பரதத்துவமென நிரூபிக்கப் படுவது. பாசுபதம்.-பதி பசு பாசமென்னின்ற திரிபதார்த்தவிதே கியாய் மூலகணேசசிவத்தையாராதித்து யோகதீக்கத்தால் பாச படலத்தை யூடுருவிக்கொண்டு மூத்திகணபதியென்னும் பசுபதி சிவத்திலேக்கியப்படுத்தி கணேசசிவமே பரதத்துவமெனநிரூபிக் கப் படுவது.

ணைவம்.—சிவாகமங்களின் ஞாபகம் உற்பவம் தேகம் விஸ்

தாரம் தீக்ஷை பிரயோஜனமென்னும் சட்பிரகாரமாகநிரூபிக்கப் படுவது. நாமகம்.—காமிகம் யோகஜம் சிந்தியம் காரணம் அசிதம் தீப்தம் சூக்ஷுமம் சகஸ்திரம் அம்சுமான் சுப்பிரபேதம் விஜயம் நிஷ்வாசம் சுவாயம்பு அனலம் வீரம் ரௌரவம் விமலம் மகுடம் சந்திரக்ஞானம் விம்பம் புரோர்க்கீதம் லலிதம் சித்தம் சந்தான சமிக்ஷை சாருவோக்தம் பரமேஸ்வரம் கிரணம் வாதுளமென்ன அஷ்ட விம்சதிபேதமாயிருப்பது. உற்பவம்.-காமிகாதிஷ்ஷ்டாகமம் சத்தியோஜாதமுகத்திலும் தீப்தாதிஷ்ஷ்டாகமம் வாமதேவமுகத் திலும் விஜயாதிஷ்ஷ்டாகமம் அகோரமுகத்திலும் ரௌரவாதி ஷ்ஷ்டாகமம் தற்புருஷமுகத்திலும் புரோர்க்கீதாதியெட்டாகமம் ஈசானமுகத்திலுமிருந்து வெளியிட்டருள்வது. பேதம்.—காமி காதிபூர்வதசகம் சிவபேதத்தையும் விஜயாதிதசகம் சிவ ருத்ரபேதத்தையும் புரோர்க்கீதாதி தசகம் சிவசக்தி ஆத்மபேதத்தையும் யதாப்பிரகாரம் அதன் அர்த்தசாரங் களைக் குரோமுகரித்து சிவக்ஞானதேசிகரா லுணர்த்தப்படுவது. விஸ்தாரம்.—அஷ்டாவிம்சதி ஆகமங்களையும் அதிரயிப்பவர்க்குப் போதமாம்படி நாரசிங்கமென்னும் மிருகேந்திராகமமுதல் வித்யா வான்மகம் முடிவாய்விளங்கிய இருநூற்றேழு உபாகமங்களாக விரித்து மூலாகமப்பொருளைத்துலக்கி பூர்வாசாரியர்களால் சொல் லப்பட்டது.

தீக்ஷை.—சமய விசேஷ நிருவாண சத்பீஜ அபிஷேகமென் றைந்துபேதமாய் ஸ்ரீசற்குரு ஆசிரயிப்பவரின் அதிகாரமுதா பருவங்களைத் தெரிந்துபதேசிப்பது. அவற்றுள். சமயதீக்ஷை.— பஞ்சபஞ்சஉஷத்காலத்தெழுந்து சிவாலயம்வினைக்குதல் நியம்முடி ஞகந்தனவனத்திற்சென்று சுகந்தபுஷ்பங்களையெடுத்தல் மாலை கட்டி ஈசன்றிருமேனிக்கணிசெய்தல் தேவார திருவாசக திரு விசைப்பா சிவபுராணாதி பக்தவிலாசங்களைக் குருமுகமாகப் பார யணஞ்செய்தல் வில்வாதி புஷ்பச்செடிகள்வைத்துப் பயிர்செய் தல் விபூதிருத்திராக்ஷ காஷாய லிங்க பஞ்சாக்ஷர மென்னும் பஞ்ச முத்திரையணிந்த சிவனடியாரை சிவமாகப்பாவித்து வழிபாடு செய்தல் சிவாலயம் விஷ்ணுவாலயம் பிர்மாலயம் சத்திரம் மடம் இவைகளை நூதனமாகச்செய்தல் க்ஷீரணமானதை உத்தாரணஞ்

செய்தல் கங்கையாதிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தல் சிவாலயங் களிற் காலந்தவறாது தெரிசித்துப் பிரதக்ஷணமுதலானபணிக ளாச்செய்தல் இந்தக்குணமுடைய சிஷ்யனுக்கு குணதிகரண விருக்கின்ற சமயாசாரியன் பஞ்சாக்ஷரத்தை ஸ்தூலமாகவுபதேசிப்பன். அதைச்சற்சரிதையுடையனுகவிருந்து சதாகாலமும் ஜெபித்துக்கொண்டிருப்பது.

விசேஷதீக்ஷை. — சந்தனம் புஷ்பம் தூபம் தீபம் நெய்வேத்தியம் கோஜலம் கோமயம் பால் தயிர் நெய் வாழைப்பழம் எலுமிச்சம்பழம் நார்த்தம்பழம் நெல்லிப்பருப்பு இளநீரு மற்றும் உபகரணபுஷ்பாதிகளுஞ்சேர்த்து ஆத்மசுத்தி பூதசுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி லிங்கசுத்தியென்னும் பஞ்சசுத்திகளைச்செய்து சூரிய நமஸ்கார சூரியபூசைசெய்து தெரிசனார்க்கியம் சாமான்யார்க்கியம் விசேஷார்க்கியம்வைத்து சிவத்தியானஞ்செய்து பஞ்சப்பிர்ம சடங்க பஞ்சாக்ஷர மந்திரஉச்சாடனத்தால் ஆவாகன ஸ்தாபன சந்நிதான சந்நிரோதன சகளீகரண பரமீகரண அவகுண்டன தேனுமுத்திரை யோனிமுத்திரை அமிர்தமுத்திரை லிங்கமுத்திரையாதியாக திக்குபந்தனாதி மந்திரக்கிரியாபாவனைகளை விதிப்படிசெய்து ஆசனம் மூர்த்தி மூலத்திரயம் அஷ்டபுஷ்பத்திரயம்அர்ச்சித்து பீடத்துவாரபூசைசெய்து ஈசானதிமுதலாவரணமும் அனந்தாதிஇரண்டாமாவரணமும் நந்தியாதிமூன்றுமாவரணமும் இந்திராதி நான்காமாவரணமும் வச்சிராதி ஐந்தாமாவரணமும்அந்தந்தத்தேவதாபாவனைசெய்து வில்வத்திரல் ஒண்ணு பதினெண்ணு டனிரண்டு நாற்றியெட்டு ஆயிரத்தெட்டென்னும் நாமங்களையர்ச்சித்து ஆனந்தமாய் ஸ்தோத்திரஞ்செய்து சண்டிகேஸ்வரனைப்பூசித்து சரிதையின்தொழிலைவிடாது சமஸ்தமும் சிவார்ப்பணஞ்செய்யும் சற்சிஷையையுடைய சிஷ்யனுக்கு சிவஞான தேசிகன் சுயஞ்சுமபஞ்சாக்ஷரத்தையுபதேசிப்பது.

நிருவாணதீக்ஷை. — மந்திர பத வர்ண புவன தத்துவ கலையென்னும் சடத்துவாக்களையும் நியதிசெய்து பதிபசு பாசவிவேகத்தால் பாசத்தைவிலக்கி பசுத்தன்மையைப்போக்கி பதியாகிய சிவம் நீயென்றுபதேசிக்கப்பெற்று அகம் சிவம் சிவம் அகமென்கின்ற அனவரதபாவனையையுடையவனுய்ச் சாயையைப்போல

ரூபாரமாசாரியனைவிட்டு சதாகாலமும்பிரியாதிருப்பது.

அத்துவாவியாதி. — விநாட்டபுருஷனுக்குச் சாந்தியாதீதகலை ஊர்த்துவமாய்ச் சாந்திகலை முகமாய்ப் வித்தியாகலை இருதயமாய்ப் பிரதிஷ்டாகலை குஹ்யமாய்ப் நிவர்த்திகலையாதாரமாய் அன்படித் தோரகூரமுஞ் சர்மமாய்ப் இருநூற்றிருபத்தாகாலு புனைமுமாம் ரோமமாய் பதிலைருமந்திரமும் ரக்தமாய்ளண்படத்தாருபதமும் தசையாய் மூப்பத்தாறுதத்துவமும் அல்நிமக்ஷசுத்திலையாய் இவையாவும்டாகியத்திற்றோற்றுவது சாக்ரமாய் அதுமுதற்றோற்றுவது சொப்பனமாய்ப் பாகியாந்தரங்களினக்கிரகித்து பீஜரூபமாயடக்கியிருப்பது சுழுத்தியாய் ஊர்த்துவமுகத்திற்பிரதகமாவது துரியமாய்சிவகிருபையோடுனைசேயாகமாவைதுதுரியாதீதமாய் இந்நிலையிலிருக்கின்றசிஷ்யனை உஜ்ஜீவிப்பிக்கும்பொருட்டு சிவமேதிருவுருக்கொண்டு ஸ்ரீசற்குருசொரூபமாக வெழுந்தருளி அத்துவாவாவாறையும் அதனதுரூபதெரிசன சுத்தியாற் பிரத்தியுகமாக்கி சுத்தாத்மாவாக நிருவாணதீக்ஷைகூக்கிப்பாத்திரமாக்குவது.

பதி.—அவாங்மநோகோசரமாகவிருந்தும் தமதுஅபாரகருணையிலை ரூப வரூப ரூபாரூபராகப்பிரிந்துநின்று சருவாரம்பகமும் கலையும்பண்ணுகின்றசிவம். அவற்றுள். ரூபசிவம்.—பஞ்சவர்த்திர சதுர்ப்புஜாஸ்த காவகண்ட திரிநேத்திரதாரியாய்அரசியிப்பனாய்க் குப்பிரசன்னமாகிஅவரவரபிமதவரத்தைருக் கொடுக்கப்படுவது. அரூபசிவம்.—மும்மலநீங்கிய சுத்தாத்மாக்களுக்குநிர்மலரூபமாய் நின்றைக்கப்படுத்துவது. ரூபாரூபசிவம்.—தனக்கெனசேவாருருவ நாமமின்றி சித்திர படசிலா ஜல தருப்பணை அரிந்திரபாதசரித்திர கௌமல மிருத்து லோக சர வசர சுரை தாருவாதிகளில் அடியார்களெந்தரூபத்தைக்கொடுத்தாலும் அதுசேதனக்குருவுமாயும் அவ்வடியார்களெந்தநாமத்தைக் கொடுத்தாலும் அதுசேவதனக்கு மிகவும் அற்புதமான நாமமாயுமங்கிகரித்துக்கொண்டு அவ்வடியார்களை எக்காலமும் ரக்ஷித்துக்கொண்டிருப்பது.

பசு. — அநாதியாய் செம்பிற்களிம்புபோல ஆணவமாயையென்னும் பாசத்திரயத்தாற்பந்திக்கப்பட்டுச் சிவசிருஷ்டியிலுற் பாசபந்தங்கள்நிவர்த்திக்குமிடத்து விக்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னத் திரிவிதரூபமாய்ச் சிவசாயுச்சியத்தைப்பெறுவது

